உ

கடவுள் துணை.

# செந்தமிழ்


தொகுதி-௧௪.] நள௵ ஆடிமீ [பகுதி-௯.
Vol. XIV. July—August, 1916. No. 9.


கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்
5-வது ஆண்டுநிறைவின் கொண்டாட்டத்தில்
இராமநாதபுரம் ஸமஸ்தாநாதிபதியும்
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சாசுவதஅக்கிராசநாதிபதியுமான
ஆனரபிள்
ஸ்ரீமத்-ராஜராஜேச்வரஸேதுபதிமஹாராஜா அவர்கள்
சபைத்தலைமைவகித்துச்செய்த

## உபந்யாசம்.

சைவத்தின்மேற்சமயம்வேறிலையதிற்சார்சிவமாம்
தெய்வத்தின்மேற்றெய்வமில்லெனுநான்மறைச்செம்பொருள்வாய்
மைவைத்தசீர்த்திருத்தேவாரமுந்திருவாசகமும்
உய்வைத்தரச்செய்தநால்வர்பொற்றாளெம்முயிர்த்துணையே.

சீர்தந்தவெள்ளிதழ்ப்பூங்கமலாசனத்தேவிசெஞ்சொற்
றார்தந்தவென்மனத்தாமரையாட்டிசரோருகமேற்
பார்தந்தநாதனிசைதந்தவாரணப்பங்கயத்தாள்
வார்தந்தசோதியம்போருகத்தாளைவணங்குதுமே.

சேதிக்கலாந்தர்க்கமார்க்கங்களெவ்வெவர்சிந்தனையுஞ்
சோதிக்கலாமுறப்போதிக்கலாஞ்சொன்னதேதுணிந்து
சாதிக்கலாமிகப்பேதிக்கலாமுத்திதானெய்தலா
மாதிக்கலாமயில்வல்லிபொற்றாளையடைந்தவரே.

*

## கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி உமாமகேச்வரம்பிள்ளையவர்கட்கும் இவ் வவையின்கட்கூடியுள்ள கலைவல்லோர்கட்கும் ஏனையோர்கட்கும் விஞ்ஞாபனம்.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாவது ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் இக் கழகத்திற்கு யான் தலைமைவகிக்கவேண்டுமென்று கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார் என்பாலுற்ற அன்பினால் விரும்பியதால் அவ்விருப்பை மறுக்க இயலாதவனாய், யான் மிகவும் கல்வி அறிவு ஒழுக்கம் முதலியவைகளால் நிரம்பிய ஒருவர்க்குரிய இத்தலைமையை வகிக்கத்துணிந்தேன்.

என்னை இவ் வருடக்கொண்டாட்டத்திற்குக் குறிப்பிட்ட காரணம் சிறிதும் யானறியேனாயினும், எனதுமுன்னோர்கள் தமிழ்ப் பாஷையில்வைத்துள்ள அளவிறந்த அன்பினாலும், அவர்கள் தமிழ்ப் பாஷையை நன்கு கற்றோரிடத்து ஈடுபட்டு அவர்கட்குவேண்டும் பொருள்முதலியன ஏராளமாய்க்கொடுத்துள்ள காரணத்தாலும், என்முன்னோர்களில் அநேகமாய் எல்லோருமே தமிழ்ப்பாஷையை நன்கு கற்றோர்களாயுள்ள காரணத்தாலும், இன்னும் இம்மாதிரியான சில காரணங்களாலுமேமட்டும் அப்படிப்பட்ட குலத்திற் பிறந்த என்னைக் கௌரவிக்கவேண்டி இத்தலைமைக்குக் குறிப்பிட்டதாக எண்ணுகிறேன். என் முன்னோர்களில் ஒருவரை, ஓர் கவிஞர் பாடிய காலத்து, "ஆயுந் தமிழினும் போரிலும் பாரிலகத்தியனும், சேயும்" என்றும், "காக்கும் கருணையும் கல்வியும் வாழ்வும் கவிமதுர, வாக்கும் தழைத்தவன்" என்றும், "பன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற் பாரின்முத்தும், பொன்னுஞ் சொரியும் ரகுநாதன்" என்றும், "சீதக் கமல வயற்றேவை காவலன் செந்தமிழுங், கீதக் கலையும்வல்லான் ரகுநாதன்" என்றும், எங்கள் சேதுநாட்டைக் கூறுமிடத்து, பால்வாய்ப் பசுந்தமிழ் வீசிய வாசம்பரந்தவைகைக், கால்வாய்த்த நாடென்றும் பாடியிருக்கும் கவிகளையும், சேதுபதிகட்கே பாஷைக் குத்தப்புவார்கண்டன் என்ற ஓர் பட்டமிருத்தலையும், இன்னும் எனதுபிதாமகர் செய்துள்ள அநேகந் தமிழ்நூல்களையும், எனது பிதாவின் தமிழ்க்கலையின் தேர்ச்சியையும், தங்களில் அநேகர்கள் அறிந்தவிஷயமே. அப்படிப்பட்ட நயங்கள் சிறிதும் இலையென்றாலும், தமிழ்ப்பாஷையின் சுவையினும் அதனிடத்துள்ள அநேக

அருமையான விஷயங்களிலும், நன்கு கற்றவர்வாயிலாய்க்கேட்டும் நான் சிலநேரங்களிற் படித்துள்ள நூல்களினிடத்துக் கண்டும் நான் மிகவும் ஈடுபட்டுள்ளவனாக இருக்கிறேன். இதுவும் நான் தலைமைவகிப்பதற்கு ஒரு காரணமாகும்.

இக்கரந்தைத்தமிழ்ச்சங்கமிருக்கும் தஞ்சைநகரின் பழமையையும் பெருமையையும் பொதுவாய்ச் சோழநாட்டின் உயர்வையும் ஒருகாலத்து எல்லா நாட்டினுள்ளும் சிறந்து ஓங்கியிருந்ததன்மையையும் யாவரும் அறிவர். சோழர்கட்குமுன், இப்போதுள்ள மறவர் கள்ளர் இச்சாதியாரின் முன்னோர்கள் நாகர்கள் என்ற பெயரோடு இச்சோழராஜ்யத்தை ஆட்சிபுரிந்ததாகவும், அவர்களின் தலைநகராகத் தஞ்சை திருக்குடந்தை காவிரிப்பூம்பட்டினம் இவ்விடங்களிருந்தனவாகவும் சரித்திரவாயிலாக வெளியாகிறது. சிலப்பதிகாரமென்ற சங்கநூலின்வாயிலாயும் இக்கதை தெரிகிறது. இச்சோழ அரசு எவ்வளவு முற்காலத்தது என்பதற்குச் சான்றாக கி. மு. 247-ம் வருடத்திற்குமுன்பு இலங்கைத்தீவைச் சோழவரசர்கள் படையெடுத்து வென்றிருக்கிறார்களென்பதைக் கூறுவேன். இச்சோழநாட்டின்பெருமையும், அதனிடத்துள்ள அநேகம் சைவ வைஷ்ணவ ஆலயங்களின் உயர்வும், ஆங்கு என்றுமே பஞ்சம் வறுமை முதலியன இல்லாது வளம் கொடுக்கும் அநேக நதிகளிற் சிறந்த பொன்னியாறு என்று கூறும் காவேரியாற்றின் உயர்வும் நீங்கள் யாரும் நன்கு அறிவீர்கள். இந்நாட்டை வர்ணிக்கப்புக்க காலத்து, ஒருகவிஞர்,

“ எரியுமேற்றத்திலனும்பிறர்நாட்டு
வாரிசுரக்கும்வளனெல்லாந்—தேரில்
அரிகாலின்கீழுகூஉ மந்நெல்லேசாலுங்
கரிகாலன்காவிரிசூழ்நாடு.”

என்று கூறினர். இக்காவேரியாற்றிற்கு இற்றைக்கு 1099-வருடங்கட்குமுன் கரிகாலச்சோழனென்ற அரசனால் அநேகம் கால்வாய்களும் மதகுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்குமேயாகில் அக்காலந்தொட்டே இச்சோழநாட்டின் வளத்தினும் செழிப்பினும் அரசர்கள் எவ்வளவு ஊக்கமுடையராயிருந்திருத்தல்வேண்டுமென்பது வெளியாகும். சோழ அரசர் ஆட்சி, பர்மாவிலுள்ள கடாரமென்றவூரிலும்,

இலங்கைத்தீவினும், மலைய ஆர்ச்சிபிலகோ என்ற இடத்தினும், நிக்கோபார் என்ற தீவிலும், இன்னும் இந்தியாவில், கன்னியாகுமரிமுதல் இமயப்பொருப்பினின்றுவழியும் கங்கைநதிவரையினும் பரவியுள்ளதென்பது சரித்திரத்தினுல் தெரியலாம். 1800-வருடங்கட்கு முன் நலங்கிள்ளியென்றசோழன்மகன் கிள்ளிவளவனென்ற ஓரரசன், இலங்கைஅரசன்புத்திரியை மணந்திருந்தானென்பது தெரிவதால் அவ்வரசாட்சியின் உயர்வு இத்தன்மையது என்று வெளியாகும். மற்றும் அரசாண்ட கோச்செங்கட்சோழன் என்ற அரசனுல் இயற்றப்பட்ட தேவாலயங்கள் அநேக நூற்றுக்கணக்கானவை யென்பதையும் சரித்திரங்கள் கூறுகின்றன. பின்னர் அரசாண்ட கோக்கிள்ளி யென்றசோழ அரசன், நாகர்கன்னிகையை மணந்து தொண்டைமான் இளந்திரையன் என்ற ஒரு குழந்தையைப் பெற்றானென்றும், இப்போதுவழங்கும் தொண்டைமண்டலம் என்ற நாட்டிற்கு இது மூலமென்றும் தெரிகிறது. 1050-வருடங்கட்குமுன் முதலாவது ஆதித்யன் என்றஅரசன், கொங்குநாட்டையும் தொண்டைமண்டலத்தையும் கொண்டானென்றும், அவ்வரசனுக்குப் பின்வந்த முதலாவது பராந்தகன், வடஆர்க்காடு, சேலம் ஜில்லாக்களையும், மைசூர் ராஜ்யத்தில் சில பாகங்களையும் பாண்டியநாட்டையும் இலங்கைத்தீவையும் தன்ஆட்சிக்குட்சேர்த்திருந்தானென்றும் தெளிவாய்த்தெரிகிறது. இப்பராந்தகசோழனே சிதம்பரத்தில் விக்கிரமசோழனுலாவிற்கூறிய "கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங், காதலாற் பொன்வேய்ந்த காவலனும்." என்றபடி சிற்சபை மண்டபத்திற்குத் தங்க ஓடுகளாற் கூரையும், அப்பழநூல், "பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால், ஆடரவப் பாய லமைத்தோனும்" என்றபடி ஸ்ரீரங்கநாதனுக்குப் பல்வகைரத்நங்களாற் சேஷசயனமும் சமைத்தவன் ஆவன். அக்காலச் சோழஅரசர்களிற்பெரும் பான்மையோர் சைவ வைஷ்ணவமதத்துவேஷமின்றியும் சிறந்த ஒழுக்கமுடையராகவும் இருந்ததாய் அவர்களின் செய்கைகளைக் கூறும் சரித்திரங்களால் தெரிகிறது.

இப்பராந்தகசோழன் இப்போது கொங்குதேசமென்றும் கோளதேசமென்றும் பேர்வழங்கும் மலையாளராஜ்யத்தின் அரசரின் மகளை மணந்து ஹிரண்யகர்ப்பம் துலாபாரம் என்ற யாகங்களைச்

செய்ததாகச் சரித்திரம் கூறும். இதற்குப்பின் 985முதல் 1013வரை அரசாண்ட ராஜகேசரிவர்மன் என்ற முதலாவது ராஜ ராஜன், கொல்லம்முதல் ஒரிசாவரையிலும் தனது ஆட்சியைப் பரவச் செய்திருந்ததாய்த் தெரிகிறது. இவ்வரசனே 1013ல் கடலிடத்துள்ள 12000 தீவுகளைத் தன்வசப்படுத்தியவன்; இவ்வூரிலுள்ள, சிற்பத்தால் மிகச்சிறந்த ப்ரகதீச்வரஸ்வாமி கோவிலையும், கங்கை கொண்டசோழபுரத்திலுள்ள ஆலயத்தையும் கட்டியவன். தனது த்ரானசாஸனங்களில் தன் சரித்திரத்தைச் சுருக்கி முற்கூறும் வழக்கத்தை இவன் புதிதாய் ஏற்படுத்தியவன். இவற்குப்பின் வந்த ராஜேந்திரசோழன், 1044வரு வரை அரசாண்டும், கஞ்சம்ஜில்லா மகேந்திரகிரிவரையுள்ள நாடுகளை வென்றும், கீழ்ப்பர்மாவிலுள்ள கடாரத்தைக்கொள்வதற்காகக் கப்பற்படை ஒன்று அனுப்பியும், நிக்கோபார் என்ற தீவைக்கொண்டும், அரசாண்டவன். இவற்குப்பின் முதலாவது ராஜாதிராஜதேவர் என்ற அரசரும், ராஜமகேந்திரர் என்றவரும், வீரராஜேந்திரதேவர் என்றவரும் அரசாண்டதாய்த் தெரிகிறது. கடைசியிற் கூறிய இவ்வரசன்புத்திரியைமணந்த ஆறுவது விக்கிரமாதித்தியன் என்ற வடபாலிலுள்ள ஓரரசன் சோழராஜ்யத்தின்மீது படையெடுத்துவந்தபோது, குலோத்துங்கன் என்ற சோழ அரசன், இப்போது மைசூர் ராஜ்யத்தில் தங்கச் சுரங்கங்கள் உள்ள கோலார் என்ற இடத்திலிருந்து துங்கபத்திராநதிவரை 1073-ம் வருடத்தில் அவனைத் தோற்று ஓடும்படி துரத்தியதாகத் தெரிகிறது.

முதலாவதுகுலோத்துங்கனின்மகன் விக்கிரமசோழன் 1118 முதல் 1135 வரையிலும், இரண்டாவது குலோத்துங்கன் 1135 முதல் 1146 வரையிலும், இரண்டாவது ராஜராஜன் 1146 முதல் 1171 வரையிலும், ராஜாதிராஜன் 1171 முதல் 1178 வரையிலும், மூன்றுவது குலோத்துங்கன் 1178 முதல் 1215 வரையிலும், மூன்றுவது ராஜராஜன் 1216 முதல் 1244 வரையிலும், மூன்றுவது ராஜேந்திர சோழன் 1246 முதல் 1267 வரையிலும் சோழராஜ்யத்தை ஆண்டு வந்தார்களென்று தெரிகிறது. அதன்பின் இச்சோழராஜ்யம், விஜய நகரத்து அரசர்களால் 1600-வது வருடம்வரையிலும் அரசாளப் பட்டும் அதன்பின் நாயக்கர்கள் ஆட்சிக்குட்பட்டும் 1691 முதல்

முகல்ஸ் என்ற துருக்கஜாதியார் ஆட்சியிலிருந்தும் பின்னர் மகாராஷ்டிரர் ஆளுகையின்கீழமர்ந்தும் வந்ததாகத் தெரிகிறது. 1749-ல் சோழதேசம், ஏனைய சுற்றுள்ள நாடுகட்கு ஒப்ப இனிமேல் என்றைக்கும் மாறுபாடடையாவண்ணம் நமது ஆங்கிலத் துரைத்தனத்தாரவர்கட்கு வந்ததென்பது இத்தஞ்சைநகரைத் தலைமையாகவுடைய இச்சோழதேசத்தின்சரித்திரத்தின்சுருக்கம்.

இத்தகைய ஒப்பற்ற இச்சோழராஜ்யத்தின் தலைநகரின்கண்ணே தாய்மொழியாகிய தமிழ்ப்பாஷையை அதன் தற்காலந்தளர்ந்தநிலையினின்றும் முன்னிருந்த உயர்ந்தநிலைக்குக்கொண்டுவருவதே முக்கியகாரணமாக இத்தமிழ்ச்சங்கம் ஏற்பட்டுள்ளது தமிழ் அபிமானிகள் எல்லோர்க்கும் பெருமகிழ்ச்சியை அளிப்பதாகும். தமிழ்ப் பாஷையின் உயர்வு இவ்வளவென்று யாரும் அளவிட்டுக்கூறுதல் முடியாதகாரியமாகும். அத்தமிழ்ப்பாஷையை, இப்போது நமது சர்வகலாசங்கத்தார் பள்ளிக்கூடங்களிற் கட்டாயப்பாடங்களில் ஒன்றாகச்சேராதது தமிழ்ப்பாஷைக்குப் பெரிய ஓர் தீங்கை விளைவித்திருக்கிறது. அச்சர்வகலாசங்கத்தில் மிக்க செல்வாக்குடைய எனது நண்பர் ஒருவர் தமிழராயிருந்தும், தமிழ்ப்பாஷை மனத்திற்கு உற்சாகத்தைக்கொடுக்கும் பாஷை(Emotional Language)என்றும், ஆனதால் அதைப் பள்ளியிற் படிக்கும் மாணக்கர்கள் தாங்களே கற்க வேண்டியதென்றும் சொன்னார். ஆனால் அவர் சொல்லியது எனக்கும் இன்னும் எனது பல நண்பர்கட்கும் உடன்பாடில்லாத காரணத்தால் அதைச் சிறிதும் கவனிக்கவில்லை. உலகத்திலுள்ள எந்தப் பாஷை நன்றாய்க் கற்றநிலையில் மனதிற்கு உற்சாகத்தை அளிக்கத் தகாதது?

ஆங்கிலதேசங்களில் தாய்ப்பாஷை ஆங்கிலமாயிருந்தும், மேற்கண்ட ஆங்கிலபாஷையை வற்புறுத்தி மாணக்கர்கட்குக் கற்பிப்பதுபோல் ஏன் இத் தமிழ்த்தேசத்தில் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப் பாஷையைக் கற்பிக்கப்படாது. இதன்காரணம் எனக்கு நன்கு தோற்றவில்லை. அப்படிப் பாடங்கள் ஏற்படுத்தினபோதிலும், தமிழ்ப் பாஷையில் நல்ல பயிற்சியுடையவர்களைக் கலந்து அவர்கள் குறிப்பிடும்புத்தகங்களைப் பள்ளியிற்பாடமாகவைத்தல் மிகவும் முக்கியமானதாகும். நமதுராஜாங்கத்தார் (கவர்ன்மெண்டு) இப்பாஷையின்

அபிவிர்த்தியிற் சிரத்தை காட்டினாலல்லது இப்பாஷையின் விர்த்திக்கு ஒருபோதும் வழிகள் ஏற்படமாட்டாது. அப்படி ராஜாங்கத்தார்க்கு ஊக்கம் ஏற்படும்படி செய்யவேண்டுவது இத் தமிழ்ச்சங்கம்போன்ற கழகங்கட்கும் நம்போன்ற தமிழபிமானிகட்கும் முதன்மையான கடமையாகும்.

இக்காலத்தில் முன்போல் தமிழை வளர்ப்பார் பலர் இலர். இற்றைக்கு 300 வருடங்கட்குமுன் இராமநாதபுரத்தில் அரசுபுரிந்த ரகுநாதசேதுபதி என்றவரைப் பாடிய புலவர்,

"மூவேந்தருமற்றுச்சங்கமும்போய்ப்பதின்மூன்றொடெட்டிக்
கோவேந்தருமற்றுமற்றொருவேந்தன்கொடையுமற்றுப்
பாவேந்தர்காற்றிலிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்த்ரதாருவொத்தாய்ரகுநாதசெயதுங்கனே."

என்று கூறியுள்ளார். அக்காலத்தே தமிழ் அபிமானிகளும் தமிழை வளர்க்கும் அரசர்களும் அவ்வளவு குன்றியிருந்தால் இப்போது அதனினும் அபிமானிகள் எவ்வளவு குறைந்திருக்கவேண்டுமென்பது நான் சொல்லாமலே தங்கட்குத் தெரியலாம். இக்காலத்திலுள்ள ராஜாக்களும் ஜெமீன்தார்களும் மிராசுதார்களும் ஒருபோதும் தமிழ்ப்பாஷையைக் கருதி அதன் அபிவிருத்தியிற் கருத்து வைத்து அதற்கு வேண்டும் உபாயங்கள் தேடுவதில்லை. அவருள் அருமையாய்ச் சிலர் தங்கள்மீது புலவர்கள் புகழ்ந்துபாடும் கவிகளைக் கேட்டு மகிழ்வதன்றி வேறு எவ்விதமுயற்சியும் உடையவராய் இருத்தலை நாம் காணவில்லை.

இத் தஞ்சைஜில்லாவிலும் இன்னும் மற்றஇடங்களிலுமுள்ள பெரிய மடாதிபதிகள், இக்காலத்தில் முன்போல் பாஷைவிருத்திகளிலாவது மதாசாரங்கள்முதலிய கோட்பாடுகளின் விருத்தியிலாவது சிரத்தையில்லாதவர்களாயிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. இப்போது, சமீபத்தில் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள்காலத்தில் எத்தனை தமிழ்ப்புலவர்களும் இதரபாஷைவல்லவர்களும் இருந்திருப்பதாய்க் கேள்விப்படுகிறோம். அவ்வாதீனத்திற் கலைபயின்றவர்களுள் இன்றைக்கும் உலகமெங்கும் புகழும்படி கல்வியின்றபடி ஒழுகும் குணமுடையராய் எல்லோராலும்

நன்குபாராட்டப்பட்ட நமது மகாமகோபாத்தியாயர் **சாமிநாத ஐயரவர்க**ளொருவராவர். அவர்கட்குப்பின் எந்தஆதீனத்திலிருந்தாவது நன்றாய்க்கல்விபயின்றவர்கள் வந்திருப்பதாய்த் தெரியவில்லை. எல்லா ஐச்வரியவந்தரிலும் மடாதிபதிகள்மட்டுமே இப்படிப்பட்டவிஷயங்களில் ஏராளமானபொருள் செலவழிக்குந்தகுதியும் கடப்பாடும் உடையவர்களென்பதை யாரால் மறுக்கமுடியும். அப்படியிருந்தும் அவர்களால் இத்தமிழ்ப்பாஷை பராமுகம்செய்யப்படுவதைநோக்குங்கால் இன்னும் இப்பாஷையின்விர்த்திக்கு ஏற்றகாலம்வரவில்லையென்றே மனம் மிகவும் கிலேசத்தோடு எண்ணத்துணிகிறது.

இப்போது திருவாவடுதுறையிலுள்ள ஸ்ரீலஸ்ரீ **அம்பலவாண தேசிகரவர்கள்** கல்விஅறிவால் எவ்வளவோ சிறந்தவர்களாயிருந்தும், தமிழ்ப்பாஷையில் அளவிறந்த ஆராய்ச்சிகள்செய்தும் அப்படிப்பட்ட அரியவிஷயங்களைப் பிறர்க்கு உபயோகப்படுமாறு இன்னும் வெளியிட்டிலர். அவர்களிடத்து இத்தமிழ்ச்சங்கத்தார் தெரிவித்து அவர்கள் கண்டுள்ளவிஷயங்களை வெளியிடுமாறுசெய்தால் அது தமிழுலகிற்கு ஓர் பேருபகாரமாகும். இத்தகையதமிழ்ச்சங்கம் ஒவ்வொரு பெரியநகரங்களிலும் ஏற்பட்டு இக் கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார்போன்று ஒவ்வொரு சங்கத்து அங்கத்தினர்களும் ஊக்கத்தோடு பாஷையின்விர்த்திக்குப் பாடுபடுவராயின், தமிழ்ப்பாஷையை முன்னிருந்தபெருமையிலேயே அதிசீக்கிரத்தில்வைக்கலாமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை.

இத்தமிழ்ச்சங்கத்துவேலைகளுள் இதரபாஷையிலுள்ள உயர்ந்த புத்தகங்களை எளியநடையில் மொழிபெயர்த்துத் தமிழ்மக்கட்கு உதவ வேண்டுவது ஓர் பெரியகடமையாய்க் கருதவேண்டும். அப்படிப்பட்ட முயற்சி மேற்கொண்டுசெய்வதற்கு அ நே க ம் ஆங்கிலம்கற்றோரும் உடந்தையாயிருப்பரென்று எண்ணுகிறேன். இக்காலத்தில் ஆங்கிலம் கற்றவர்கள் தாங்கள் பரீக்ஷையில் தேறுவதற்குமட்டுமே தமிழ்ப்பாஷையைப் படிப்பதன்றி அப்பாஷையிலுள்ள அரியவிஷயங்களை அறிவதற்குப் பெரும்பான்மையோர் முயல்வதேயில்லை. சமீபத்தில்நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வருடக்கொண்டாட்டத்தின்போது உபந்யாசம் செய்த ப்ரொபசர் (Professor) சுந்தரராமையரவர்கள், கனம் வி. எஸ். ஸ்ரீநிவாசசாஸ்திரிகள், தூத்துக்குடி வக்கீல் சோமசுந்தரபாரதிகள் இப்படிப்பட்டவர்கள் சிறந்த ஆங்கிலம்கற்றோராயிருந்தும், அவர்கள் உபந்யாசத்தால் அவர்கள் எவ்வளவோ தமிழபிமானமும் பாஷாஞானமும்

உடையவர்களென்பதை அறிந்து எல்லோரும் மிக்க அதிசயத்தோடு கூடிய களிப்பையடைந்தார்கள்.

ஆனால், தமிழ்ப்பாஷையை உபபாஷையாய்க்கொண்டு ஆங்கிலம் கற்றுப் பரீக்ஷையில் தேர்ந்தவர்களின்எண் எத்தனை. மேற்கூறியவர்கள் போன்று ஆங்கிலத்திற் சரியானபாண்டித்தியத்தோடுகூடத் தமிழ்ப் பாஷையில் நிரம்பியகல்வியும் உடையார்களின்எண் எத்தனை. இதை யோசிக்குமிடத்து ஆங்கிலம்கற்றோர்கள் தாங்கள்கற்ற அளவிற்குமேல் தமிழ்ப்பாஷையில் விஷயங்கள் உள்ளன என்ற எண்ணம் அவர்கட்கு உண்டாகவேண்டுமென்பதும், தமிழ்ப்பாஷையையே கருதிப்படித்து அதிற் சிறந்த தகுதியடைந்த தமிழ்க்கலைவல்லாரிடத்து ஆங்கிலம் கற்றோர் எவ்வளவு மரியாதையுடனும் அன்புடனும் அவர்களின் கல்வி நயங்களில் மதிப்புடைமைகாட்டவேண்டுமென்பதும் நான்சொல்லாமலே தங்கட்கு வெளியாகும். அப்படிப்பட்ட எண்ணங்கள் மாறுபட்டிருப்பதை நான் அநேக இடங்களிற் கண்டிருப்பதனால் அவ்வித எண்ணங்கள் எவ்வளவுபிசகு என்பதை இங்குச் சொல்லத்துணிந்தேன். சமீபத்தில் ஆரியம் திராவிடமென்ற இரண்டுபாஷைகளின்காரணமாய் அநேகவிவாதங்கள் ஏற்பட்டுள்ளது யாரும் அறிந்ததே. இவ்விஷயத்தில் அபிப்பிராயங்கள் வேறுபட்டுள்ளனவாயினும், நான் அறிந்தவரை, ஆரியர் திராவிடர் என்ற பிராமணர் தமிழர் இவர்கள் இருவரும் முற்காலந்தொட்டே ஒற்றுமையுடனேயே ஒருவரையொருவர் தழுவிவந்திருக்கிறார்களென்பதை நிச்சயமாய்ச் சொல்லலாகும். அகஸ்தியர் தமிழர், தொல்காப்பியர் தமிழர் என்ற விவாதங்களும், இவர்களின்பேர் முதலியசொற்கட்குப்புதிதானமூலம்கற்பித்தலும்,இன்னும் இத்தகைய புதுமாறுதல்களை உண்டுபண்ணுதலும் தமிழ்ப்பாஷையின்விர்த்திக்கு அநுகூலமானவைகளாகுமென்று எனக்குத் தோற்றவில்லை. இதுவிஷயமாய் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சென்ற வருஷக்கொண்டாட்டத்தில் எனதுநண்பர் சோமசுந்தரபாரதிகள் மிகவும் அழகாய் எந்தவிதத்தாலும் யாரும் மறுத்தழிக்கமுடியாதவிதமாய் அநேகம் உபமானங்களுடனும் மேற்கோள்களுடனும் மிக அழகாகவும் தெளிவாகவும் செய்த பிரசங்கத்தை அப்படிப்பட்ட வேற்றுமை உண்டுபண்ணும்கூட்டத்தார் கேட்டிருந்தால் அவர்களும் அவர்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்வார்களென்றே நம்புகிறேன். ஆரியர்கள் திராவிடபாஷையை

மேற்கொண்டு அதனிடத்து ஈடுபட்டுத் திராவிடரோடு சேர்ந்து பாஷையின்விர்த்திக்கு உழைப்பார்களேயானல் அவர்களைப் புறம்பே தள்ளுவதனல் அடையும்பயன் என்ன. ஆனல் ஆரியம் திராவிடம் என்ற இரண்டுபாஷைகளுள்ளும் திராவிடபாஷையை ஆரியர்கள் மேற்கொண்டு அதனிடத்து ஈடுபட்டு அதில் மிக்க புலமையும் உடையராய் இருந்திருக்கிறார்களென்பதை எண்ணுங்கால் நாம் எல்லோரும் திராவிடபாஷையி னுயர்வை ஆரியபாஷையைக் குறைத்துச்சொல்லாமலே மிக்க அன்போடுபாராட்டலாகும். எனக்கு நம்தமிழபிவிர்த்தியின்விஷயமாயுள்ள சில அபிப்பிராயங்களைத் தங்கட்கு இப்போது நான் தெரிவித்துள்ளேன். இவைகளில் எந்தவிஷயங்கள் உங்கள்எல்லோருக்கும் உடன்பாடாயுள்ளனவோ அவைகளைத் தாங்கள் தீரக்கருதி அதன்படிசெய்ய வேண்டிய ஏற்பாடுகளைத் தாங்கள்செய்யவேண்டுவதாய்க் கேட்டுக் கொள்வதோடு, தாங்கள் இச்சபைக்குத் தலைமைவகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக எனது என்றும்மறவாத நன்றியையும் தங்கட்குச் செலுத்துகிறேன். சுபம்.

உ

# குறுந்தொகை.

அச்சிடப்பட்ட குறுந்தொகையிலே நமக்குத்தோன்றும் பாடாந்தரங்களுள்ளே சிலவற்றையும், உரையிலே நமக்குத்தோன்றும் வேறுபாடுகளுள்ளே சிலவற்றையும் ஈண்டுக் காட்டுதும். அவை குறுந்தொகையும் உரையும் படிப்பார்க்கு உறுந்துணையாகுக.

நோமென்னெஞ்சே (கவி-ச) என்பது நோமேநெஞ்சே எனவும், ஓயான் (சு) என்பது ஓர்யான் எனவும், காப்பாடும்மே (கூ) என்பது கரப்பாடும்மே எனவும், கூன்முள் என்பது கூர்முள் எனவும், பரிக்கும் (ருக) என்பது பரக்கும் எனவும், இடைபட என்பது இடைப்பட எனவும், முயங்கற்குமினிதே (சுஉ) என்பது முயங்குவமினிதே எனவுஞ் சிலபிரதிகளில் வரைந்திருத்தல் கண்டாம்.

இன்னும், விரிந்திலங்குவெண்பல் (ருஉ) என்பது நிரந்திலங்கு வெண்பல் எனவும், நாடுநாள் (சுகூ) என்பது நடுநாள் எனவும், அரிப்பவர்பாம்பின் (சுகூ) என்பது அரிப்பவர்ப்பிரம்பின் எனவும், அஞ்சிக்

கொன்முனை (கூக) என்பது அஞ்சிகொன்முனை எனவும், அரும்பவிழ் (௩௪௯) என்பது அடும்பவிழ் எனவும், சிதைய என்பது சிதைஇ எனவும், மின்னுயிரிழந்தே என்பது மன்னுயிரிழவே எனவும் அப்பிரதிகளிற் கண்டாம்.

செங்களம்படக்கொன்று (க) என்புழிச் செங்களம் என்பதற்குச் "செழிய போர்க்களம்" என்றும், குருதிப்பூவின் என்பதற்குக் "குருதியைப்போன்றபூக்கும்பூ" என்றும் உரைகூறல் இயையுமா? செங்களம்-யுத்தகளம். "செருக்கள மடுகளஞ் செங்களம்" என்பது பிங்கலம். குருதி-சிவப்பு. இவை செம்பொருள்களல்லவா ?

கொங்குதேர்வாழ்க்கை (உ) என்னுங்கவியிலே காமஞ்செப்பாது என்பது விரும்பியதைச்சொல்லாது என இரண்டாம்வேற்றுமைப் பொருள்படத் தொகுவதன்றி "விருப்பத்தாற்கூறாது" என மூன்றும் வேற்றுமைப்பொருள்படவுந் தொகுமா ?

கூந்தலினறியவும் என்பதற்குக் கூந்தலினு மணமுடையனவும்என உரைகூறி ஐந்தனுருபு உவமப்பொருள் என்றலும் பொருந்துமா ?

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று-நீரினு மாரளவின்றே" (௩) என்புழி நீரினுமாரளவின்றே என்பது அளவினாற் கடலினும்மிக்கது என்னும் பொருட்டன்றோ! அதற்குக் கடலினும் அரிய அளவினையுடையது என உரைகூறலும் இயையுமா ? இங்கே ஆரைக்கிளவி "அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்" என்ற தொல்காப்பியவிதிப்படி அறியநின்றது என்றல் பொருந்தாதா ?

அதுகொறேழி (ரு) என்னுங்கவியிலே மெல்லம்புலம்பன் என்பதற்கு "மெல்லியகடற்றுறைவன்" என்றதும் இயையுமா ? மென்மை எதனைவிசேடித்துநின்றது ? "மெல்லங்கழி என்பதூஉம் ஒரு பண்புத்தொகைமுடிபு" என்ற பேராசிரியர்கருத்து யாது?

வேரல் வேலி வேர்க்கோட் பலவின் (கஅ) என்னுங்கவியிலே வேரல் வேலி என்பதற்கு மூங்கிலாலாகியவேலி என்றவன் முந்தூழ்வேலிய (௨௩௯) என்பதற்கு 'முந்தும்முறைமையாகியகாவல்' என்றதென்னோ? முந்தூழ் என்பது மூங்கிலன்றோ! மூங்கில் என்பதுவே நன்று.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# தமிழர் ஆரியரே.

ஆரியதேசம் இமயமுதல், கன்னியாகுமரிவரையுமுள்ளதேசமாம். அதில் இமயமுதல் விந்தமலைவரைக்குமுள்ளபகுதி ஆரியாவர்த்தமெனப்படும். (மநு. 11. 22.) ஆரியதேசமே ஆரியர்க்குப் பூர்வமுதலாக வுரிமையுள்ளதேசம். விந்தியமலைக்குத்தெற்கே குமரிவரையுமுள்ள பகுதி தக்ஷிணமெனப்படும். ஆரியர்கள் மிகநெருங்கிக் குடிகொண்டிருந்தமையால் உத்தரதேசம் ஆரியாவர்த்தமெனப்பட்டது. ஆவர்த்தம் என்பது குடிநெருங்கியவிடம். தக்ஷிணதேசத்திலே நருமதைக்கும் கோதாவிரிக்கு மிடையேயுள்ளபிரதேசம் தண்டகாரணியமெனப்படும். இத்தண்டகாரணியத்துக்குத்தெற்கின்கண்ணே குமரிவரையுமுள்ளதேசம் தமிழகமெனப்படும். தமிழகம் இடையிடையே சிறியகிராமங்களும் காடுகளுமுடையதாயிருந்தது. தமிழகத்திலே அகத்தியர்வரும்போது குடிகளிருந்தார்களென்பது காஞ்சிப்புராணத்தால் நன்குதுணியப்படும். அதுமாத்திரமன்று; அவர் தாம்புகுந்தநாட்டிலுள்ளாரோடு பயிலும்போது அவர்கள்பாஷையையும் நன்காராய்ந்தவராதல்வேண்டுமன்றோ. அதனை ஆராயப்புகுந்து அடைவுபிறழ்ந்தோ ஓதற்கெளிதாகாதோ கிடந்த பூர்வஇலக்கணத்தை மிகச் சிறப்பமையவிரித்து அகத்தியமெனத் தம்பெயராற்செய்தமையாலுந் துணியப்படும். வேற்றுநாட்டிற் புகுந்து அந்நாட்டாரால் நன்குமதிக்கப்படவிரும்பும் புலவர் அந்நாட்டுப் பாஷையைக்கற்று நூல்செய்தல் இயல்பு. வீரமாமுனி என்னும்பெஸ்கி, அவர்க்குப் பன்னெடுங்காலத்துக்குமுன்விளங்கிய யவனாசாரியர், போகர், என்னும் அந்நியதேசத்தார் இந்தியாவில்வந்ததும் நூல்செய்ததும் நோக்கத்தக்கன. இவர்கள்பெயர்கள் இன்றும் நின்றுநிலவுகின்றன. அதுநிற்க,

ஆரியர், ஆசியகண்டத்தின் மத்தியப்பிரதேசத்தில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து பின்னர்ப் பிரிந்து பலதிசைகளிலுஞ்சென்று குடியேறிய ஒரு மனிதகணத்தினரென்பது ஐரோப்பியபண்டிதர்கொள்கை. ஆயினும் அப்பண்டிதர்களும் மத்தியஆசியாவென அநுமானிக்கின்றார்களேயன்றித் திட்டமாகத்துணியவில்லை. (The ancestors of the Aryan

races of Europe and Asia are believed by many to have had their seat in Central Asia—Hints on English Etymology—Charles Annandale, M. A., L. L. D.) சிருஷ்டியாதிசம்பவங்களைக் கிரமமாகவெடுத்துக்கூறும் மநுநூல் ஆரியர்க்குரியதேச மிதுவென்றும், அதற்கெல்லை இவையென்றும், அஃது ஆரியாவர்த்தமெனப்படுமென்றும், மிக்கதிட்பநுட்பமாகக் கூறியிருக்கின்றமையால் ஐரோப்பியபண்டிதரது வெள்ளநுமானத்திலும் மநுநூற்கூற்று மிக்கவலியுடைத்தன்றோ. பூர்வத்தில் ஆரியர் வேறிடத்திருந்து ஆரியாவர்த்தத்துக்கு வந்ததாகப் பிரபலநூல்களிற்கூறப்படவில்லை. ஆரியாவர்த்தம் என்னுஞ் சொல் ஆரியர் நெருங்கிக் குடிகொண்டவிடமெனப் பொருள்தருவதென மேலேகூறப்பட்டது. ;இதனால் உத்தரம் குடிப்பெருக்கமும் தக்ஷிணம் குடிச்சுருக்கமுமுடையனவென்பது பெறப்படும். அதனால் உத்தரத்தில் ஆரியர் காலந்தோறும் பெருகினர். பெருகுந்தோறும் எல்லைகடந்து தென்னாட்டிலுஞ்சென்று குடிகொள்வாராயினர். "ஒருகாலத்து மேருத் தாழ்ந்து தெற் குயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற் குரியரெனத் தேவர்களால் வேண்டப்பட்டதும், அவ்வாறே பதினெண் கோடிவேளிருள்ளிட்ட அருவாளரையு முடன்கொண்டு அகத்தியனார் தென்னாட்டில்வந்து வதிந்தார்" என்பதும் மேற்கூறியதை வலியுறுத்தும்.

தெற்கின்கண்ணே ஆதிதொட்டுவாழ்ந்தஆரியர்க்குத் தமிழும் வடக்கின்கண்ணேவாழ்ந்த ஆரியர்க்குச் சமஸ்கிருதமும் சிவபிரானால் அருளிச்செய்யப்பட்டன. இவ்வுண்மை "இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவர்" என்னுஞ் செய்யுளாற் றுணியப்படும்.

தமிழைத் தென்மொழியென்றும், சமஸ்கிருதத்தை வடமொழியென்றும் திசைபற்றிவழங்குவாராயினர். இதனால், பூர்வத்தில் இந்த இருமொழிகளுமே ஆரியதேசத்தில் வழங்கினவென்பதும் துணியப்படும். கம்பர் "வடசொற்குந்தென்சொற்கும்வரம்பாகும்—வேங்கடம்" எனக்கூறியது இதனைவலியுறுத்தும்.

இருபாஷையாளரும் ஆரியரேயாதலின், ஒத்தசரீரவடிவமும், ஒத்தகுணமும், ஒத்தகொள்கையும், ஒத்தபழக்கமும், ஒத்தவுடையுமுடையராய்ப் பண்டுதொட்டு வாழ்ந்துவருகின்றனர். இருவர்க்கும்

வேதமொன்றே. புராணமொன்றே. மிருதியொன்றே. இதிகாசமொன்றே. சரியையொன்றே. கிரியையொன்றே. யோகமொன்றே. ஞானமொன்றே.

தமிழர் ஆரியரின்வேறாயின் இவையெல்லாமொத்திரா. மற்றெல்லாம் சார்பினால் ஒருவாறொத்திருக்குமெனக்கொள்ளினும், சரீரவடிவம் சிறிதும் ஒத்திராது. மலாயர், சீனர், காப்பிரியர்முதலிய மனுஷகணங்களிலே தமிழர் சேர்த்தெண்ணவும்படார். தமிழர்தாம் எக்கணத்திற் சேர்த்தெண்ணப்படத்தக்காரென்னிற் சுத்த ஆரியகணத்திலேயே சேர்த்தெண்ணப்படத்தக்காரென்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதாம்.

அநாரியர் என்றொருவகுப்பாருளரன்றோ, அவ்வகுப்பிலே தமிழர்சேராரோவெனிற் சேரார். அநாரியராவார் தேகப்பொலிவால் ஆரியரோடொப்புடையரேனும் வேதபாகியராய் அநாசாரமுடையராய்க் கோமாமிசம்புசிப்பவராயுள்ளவர். (பௌதாயனர்.) இவ்விலக்கணங்கள் சிறிதுமில்லாமையால் தமிழர் அநாரியரெனப்போகார். பூர்வத்தில் தமிழர் அநாரியராயிருந்து பின்னர் அகத்தியரால் ஆரியராக்கப்பட்டவராகாரோவெனில், வேதம் ஆரியருள்ளும் முதன்மூன்று வருணத்தாருமே ஓதுமுரிமையுடையர். ஆதலின் அநாரியர் வேதம் ஓதுதற்குச் சிறிதும் அருகமில்லாதவரன்றோ. அவர்க்கு வேதநெறியை உபதேசித்தலுங் கூடாதன்றோ. அன்னோர்பால் அகஸ்தியர்சென்றதும் சென்று வேதநெறியை உபதேசித்ததும் சிஷ்டாசாரத்துக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமாமன்றோ. அகஸ்தியர் தென்னாட்டிற்புகுந்தது தமிழர் ஆரியரென்னு முரிமைபற்றியேயாம். இதனாலுந் தமிழர் ஆரியரென்பது நன்கு துணியப்படும்.

தமிழரும் ஆரியரும் ஜாதியால் ஒருவரேயாயினும் பாஷையால் வேறாயினர். வேறாயினும் சமயத்தாலும் ஆசாரத்தாலும் ஒருவரே.

மூரிமுழங்கொலிநீரானான்கண்டாய்
முழுத்தழல்போன்மேனிமுதல்வன்கண்டாய்
எரிநிறைந்தனையசெல்வன்கண்டாய்
இன்னடியார்க்கின்பம்விளைப்பான்கண்டாய்

ஆரியன்கண்டாய்தமிழன்கண்டாய்
அண்ணாமலையுறையெம்மண்ணல்கண்டாய்
வாரிமதகளிறேபோல்வான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

இத்தேவாரத்தால் இருவர்க்குஞ் சிவபெருமானே கடவுள் என்பதும் இனிதுநாட்டப்படும்.

பூர்வத்திலே ஆரியரென்னும்பெயர் பரதகண்டத்திலே வைதிக நெறியுடையராயுள்ளமக்களுக்கெல்லாம் பொதுப்பெயராம். பின்னர் ஆரியாவர்த்தத்திலே ஆரியர் மிக்குப்பெருகிப்பொலிந்தமையால் ஆரியரென்னும்பெயர் அவர்க்குச் சிறப்பாயிற்று. அவர் பேசுமொழியும் ஆரியமொழியென வழங்குவதாயிற்று. பின்னர் அம்மொழிநோக்கி அதுபேசுவார் ஆரியரெனப்பட்டனர். தெற்கின்கண்ணேயுள்ள ஆரியரும் அவர்பேசுந்தமிழ்மொழிநோக்கித் தமிழரெனப்பட்டனர். ஆரியமொழியால்வழிபட்டார்க்கு ஆரியனாயும் தமிழால்வழிபட்டார்க்குத் தமிழனாயும் வெளிப்பட்டருள்புரியும் வேதமுதல்வனதுஇயல்பு இத்தேவாரத்தால் வெளியாகின்றது. அதுமாத்திரமன்று, இருமொழியாளரும் வைதிகமாக்களென்பதும், அதனால் அவர்கள் ஆரியமாக்களென்பதும் ஒருதலை.

தத்தம் மொழிப்பெருமைநோக்கிப் பண்டிதருள் ஒருசிலர் எம் ஆரியமொழிசிறந்தது எம் தமிழ்மொழிசிறந்தது என்று ஒருவரோடொருவர் மாறுடிப் பகைத்துநிற்றல் பண்டைக்காலத்துமுள்ளது. இவ்வுண்மை,

"ஆரியநன்றுதமிழ்தீதெனவுரைத்த
காரியத்தாற்காலக்கோட்பட்டானைச்—சீரிய
வந்தண்பொதியிலகத்தியனாராணையாற்
செந்தமிழேதீர்க்கசுவாகா"

என நக்கீரர்பாடிய மந்திரச்செய்யுளால் நன்கு துணியப்படும்.

இன்னும் உத்தரத்தாரும் தக்ஷிணத்தாரும் தம்முட் பெண்கொள்ளுதலும் கொடுத்தலும் வழக்கமாகவுடையர்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

மாட்சிமையோங்கும் ராமநாதபுரம் மஹாராஜா

ஆனரபிள் ஸ்ரீமான்-ராஜராஜேச்வரஸேதுபதியவர்கள்

மஹாசமுகத்தின்மீது

அவர்கள் சென்னைச் சட்டநிருமாணஸபையின் மெம்பராக

நியமனம்பெற்றதைப்பற்றிப் பாடிய

# வாழ்த்துப்பாக்கள்.

நேரிசைவெண்பா.

1. சீராம நாதனருள் சேர்ந்தோங்கும் செம்மலெங்கோன்
சீராஜ ராஜப்பேர்ச் சேதுபதி—மாராஜ!
சீரொன்றச் சேர்ந்தமர்ந்தாய் சென்னைநகர்ச் சட்டசபை
நே*ரின்றி மெம்பர் நிலை.

2. மதுரைத் தமிழ்ச்சங்க மாதலைவ! மாசில்
மதுரத் தமிழ்நாட்டு மன்னா!—துதியுறுநீ
சென்னைக் கவர்னர்சபை சேரத் தமிழ்மொழியும்
மன்னும் மகிமை மலிந்து.

3. ஆண்டில் இளையாய்! அறிவாற்ற லோடுதன்னா
டாண்ட அனுபவத் தாலிளையாய்†!—ஆண்டகைநீ
சார்தலால் அந்தச் சபைசிறக்கும்; நீயுமதைச்
சேர்தலால் சேர்ப்பாய் சிறப்பு.

4. தண்முத்துந் தண்கடலும் தண்டமிழும் தண்மையொடு
உண்மைத்தாம் சைவ உயர்நெறியும்—ஒண்மைபெறும்
சேதுவளச் சேர்ப்ப!‡இனிச் சேர்ந்தொளிர்க இச்சபைபோல்
ஏதமில்பல் சங்கத் தினிது.

5. செல்வத்தாற் கல்வியினாற் செந்தமிழ்போற் றுந்திறனால்
மல்குபுகழ் வாய்ந்தநின் மாண்மரபோர்—தொல்லை
அணிகிலாச் சீர்த்தி அணிந்துபய¶ வம்ச
மணிவிளக்காய் வாழ்க மகிழ்ந்து.

வே. முத்துஸாமி ஐயன் எம். ஏ. எல். டி.
பள்ளிக்கூட உதவிப்பரிசோதகர்,
அறப்புக்கோட்டை.

* நேரின்றி - போட்டியொருவரும் இல்லாமல்.
† இளையாய் - எதிர்மறை (இளைக்கமாட்டாய்).
‡ சேர்ப்ப - கடற்கரையுடையாய்.
¶ உபயவம்சம் - இருவழியும், தாய்வழியும் தந்தைவழியும்.

# கல்விப்பயிற்சிக்குரியது தாய்மொழி*

பெரியோர்களே!

நாம் இன்று ஆராயப்புக்க விஷயம், "கல்விப்பயிற்சிக்குரியது தாய்மொழி" என்ப துணர்வீர்கள். இவ்விஷயத்தைப்பற்றி விவரிக்கப் புகுமுன்னர் இச்சொற்றொடராற் குறிக்கப்படும்பொருளை அறிந்து கொள்ளுவோம்.

மொழி என்பது, மாந்தருள் ஒருவர்கருத்தினைப் பிறரொருவருக்குத் தெரிவிக்கும் கருவியாயுதவுவது; மக்களை விலங்கினின்றும் வேறுபடுத்திவிளக்குவது; பெரியார்கண்டுணர்ந்த அரும்பெரும் உண்மைகளைப் பிறர்க்குப் பயன்பெறுத்தி உய்விக்கும்கருவியாவது.

இனி, உலகில் வேறுவேறுதேயத்தில் வேறுவேறுமாந்தரும் தத்தம் நாகரிகஅளவிற்கேற்பத் தனித்தனிமொழிகள்வகுத்து அவைகளின் உதவிகொண்டு தம்முள் அளவளாவிக் களித்துவாழாநிற்பர். இவ்வாறு வகுக்கப்பட்டமொழிகள் அவ்வந்நாட்டினர்க்குத் தாய்மொழிகளாகின்றன.

இனி, கல்வி என்பது அறிவு, வித்தை எனப் பொருள்படும். இது "கல்" என்னுந் தாதுவினின்றும்பிறந்தது. கல்லுதலாவது தோண்டுதல், எனவே கல்வியாவது விஷயங்களை ஆராய்ந்தறிவதாம். இவ்வாராய்ச்சி தானும் மனிதர்கள் நாகரிகநிலை எய்தப்புக்ககாலந்தொடங்கி நிகழப் பெற்றுவருகிறது. இவ்வாறு ஆராய்ந்துகாணப்பெற்றன நூல்களிற் பொதிந்துவைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கல்வியாவது நூல்களைக் கற்றுணர்தலாம். இத்தகைய கல்வியறிவினைத்தேடுவதற்குத் தாய்மொழியே சிறந்தகருவி என்பது இன்று நாம் காணக்கிடக்கும்விஷயமாகும்.

---

* இது, கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம்வருடக்கொண்டாட்டத்தில் இராமநாதபுரம் ஸமஸ்தாநாதிபதியும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசநாதிபதியுமான ஆனரபிள் ஸ்ரீமத்-ராஜராஜேச்வரசேதுபதி மஹாராஜா அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமத்-இராதாகிருஷ்ணபிள்ளையவர்களாற் படிக்கப்பட்டது.

இப்பொழுது நமதுபள்ளிக்கூடங்களில் கல்விப்பயிற்சிக்கு ஆங்கிலத்தையே முக்கியகருவியாக உபயோகிக்கின்றனர். நந்தேயம் கீழிந்தியாவர்த்தகக்கூட்டத்தாரின் ஆளுகையிலிருந்தபோது பத்தொன்பதாவது நூற்றாண்டின் துவக்கத்திற் கல்வியானது தாய்மொழிகளிலோ, அன்றி ஆங்கிலத்திலோ, கற்பிக்கப்படவேண்டியதென்பதைப்பற்றிப் பெரியதோர்ஆசங்கை நிகழ்ந்தது. சுமார் 12 வருஷம் இவ்வாதம் நிகழ்ந்து கடைசியாக 1835-ஆம் ஸ்ரீ பெண்டிங் பிரபு அவர்கள்காலத்தில் பிரதமவகுப்புக்களிற் பாடங்கள் தாய்மொழியில் நடைபெறினும் உயர்தரக்கல்வி ஆங்கிலத்திலேதான் போதிக்கப்படவேண்டுமென்று முடிவுசெய்யப்பெற்றது. இத்தீர்மானத்தால், தாய்மொழிகள் விசேஷமாக வலிகுன்றிச் சீரிழக்கப்பெற்றன.

மொழி என்பது விஷயங்களை அறிவதற்குக் கருவியாயுள்ளதென்று நாம் கண்டாமன்றோ? இப்பொழுது, தாய்மொழியும் பிறமொழியும் என இருமொழிகள் உளவாக, நம் கல்வியறிவினைப் பெருக்கிக்கொள்ள எம் மொழியினைத் துணைக்கோடாகக்கொள்ளுவது சிறப்புடைத்தென்பது கடா.

தாய்மொழியோ நாம் குழவிப்பருவந்தொட்டுப் பயின்றுவந்தது; பாலொடு அருந்தி, சோற்றொடு அயின்று, துயிலொடு உறங்கியதாம்; இன்பினும், துன்பினும், யாண்டும், என்றும், நம்மொடு பயிலுவதாம். இக்கருவியினை விசேஷமாக வருந்தித் தேடப்பெறுவதும் வேண்டுவதில்லை; தேடுவதில் அளவுமிஞ்சியபொருட்செலவும் இன்று. பழக்கினாலும் இயல்பாலும் குணத்தாலும் தாய்மொழிக்கருவியினை உபயோகிப்பதிலும் மிகக் கைவந்துள்ளோம். பிறமொழிக்கருவிகளோ, மிகவரிதில்முயன்றே பெறப்படுவன; அளவில் ஊதியச்செலவு நிகழ்விப்பன; அன்றி இவ்வாறு வருந்திப்பெறினும் அவைகளைக் கையாடுவதிலும் வல்லேமல்லேம். தாய்மொழிகளால் விஷயங்களை உணருமாறுபோற் பிறமொழிகளால் அறியுமாறில்லை. சுருங்கச்சொல்லிற் பிறமொழிவாயிற் கல்வி கேவலம் உயிரற்றசெய்கையாகும். இதுமட்டுமோ? அன்னியமொழிகளால் நுண்ணியஆராய்ச்சிகள் நிகழ்த்துவதும், அரியவிஷயங்களைக்கற்றுணர்வதும், நமதிளமாணவர்களின்மூளைக்கு அளவில்லாச் சுமையைக் கொடுக்கின்றன. ஆகையான் அவர்கள் மேலும் மேலும் கற்றுத் தேறவியலாதவர்களாவதோடு, அவர் சரீரசுகங்குன்றி விரைவில்

முடிவுமெய்துகின்றனர். நமதுமாணவர்கள் தாய்மொழியிலேயே கல்வி பயிலுவதென்றால் அவர்கள் பிறமொழிகளைக்கற்றுத்தேறுவதிற் செலவாகும்காலத்தையும்பணத்தையும்காப்பாற்றிக்கொள்வதோடு அதனால் எய்தப்பெறும்அளவிறந்தபிரயாசத்தையும்நீக்கிக்கொள்வார்களன்றோ?

இக்கருத்தினையே சென்றவாண்டு சென்னைச்சர்வகலாசங்க உயர்தரப்பரீக்ஷைகளில்தேறிய மாணவர்களுக்குத் தகுதிச்சீட்டு அளிப்பதற்காகக்கூடிய மகாசபையில் கனம் Harold Stuart துரையவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்கள்:—

"நமதுபரீக்ஷைகளில் எவ்வளவுபெயர்கள் தவறிப்போகிறார்களென்பது எனக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை; இத்தனைமாணவர்கள் தேறுவதே எனக்கு வியப்பைவிளைப்பதாகும்! உங்களிற் பெரும்பாலர் உமக்கு உரியதல்லாததொரு அன்னியமொழியிற் கல்விகற்கவேண்டியிருக்கிறது. 240 லக்ஷம் தெலுங்கர்களும், 180 லக்ஷம் தமிழர்களும் தங்கள் கல்வியிற் பெரும்பாகத்தை அன்னியமொழியொன்றின் உதவிகொண்டே தேடவேண்டுமென்பது நம்புவதற்கும் மிகக்கடினமாயிருக்கிறது. இவ்வளவுதொகையுள்ளசனங்களின் தாய்மொழியைமாற்றுவதென்பது அசாத்தியம். இவர்கள் கல்வியிற்பெரும்பாகம் பிறமொழியொன்றின் உதவிகொண்டேதேடப்பெறவேண்டியதாயின், கல்வி அவர்கள்மாட்டு இலேசாகப்பரவுவதற்கில்லை. பிள்ளைகளுடைய முயற்சியெல்லாம் மொழியைக்கற்பதிலேயே செலவாய்விடுவதன்றி, நூல்களிற் கூறப்படும்விஷயங்களை அறிவதற்குச் சக்தி ஒன்றும் இல்லாதுபோய்விடுகிறது. இத்தகையபழக்கம் வீணே காலத்தையும் அறிவையும் செலவுசெய்விப்பதன்றி யாதும் பிரயோசனம் உள்ளதாகத் தெரியவில்லை."

சின்னாண்முன்னர் மதுரையிற் கல்விப்பயிற்சிசம்பந்தமாகக்கூடிய மகாசபையில் (Educational Conference) சபாநாயகம்வகித்த ஸ்ரீமான் P. T. சீனிவாசையங்கார் அவர்களும் இவ்வபிப்பிராயத்தைத் தழுவியே பேசினார்கள். கனம் ஹார்டிங்பிரபு அவர்கள் சென்றவாண்டு லாகூரில் விலங்குகளின் சிகிச்சாமுறைமைகளைப்பற்றிப்போதிக்கும் பாடசாலையொன்று தாபகமானபோது பிறபாடசாலைகளைப்போலாது அங்குத் தாய்மொழியிலேயே மாணவர்களுக்குக் கல்விபோதிப்பதாகச்

செய்திருந்த ஏற்பாட்டினைப்பற்றி மிக வியந்து பேசியுள்ளார்கள். உலகெலாம்போற்றும் மகாபண்டிதரான கனம் இராமேந்திரநாத் டாகூர் அவர்களும் தாய்மொழியிற்கல்வியே சிறந்ததெனக்கொண்டவர்களென்பது அறிஞர்பலரும் நன்குணர்ந்ததொன்றாம். இவ்வாறு பிரபல அறிஞர்கள்பலரும் பிறமொழியிற் கல்விபயிற்றுவது அவசியமில்லாதபாரத்தை நம் இளமாணவர்களுக்குக்கொடுத்து அவர்களுடைய அறிவாற்றல்கள் நன்குபிரகாசியாது கெடுக்கிறதென்று அபிப்பிராயப்பட, திருவல்லிக்கேணிப் பெண்பாடசாலையிற் கல்விப்பயிற்சி ஆங்கிலத்தில்நிகழ்வதைப் பற்றிச் சிலமாதங்களுக்குமுன் சென்னைச் சட்டநிரூபணசபையில் எழுந்த ஆசங்கைக்குவிடையளிக்குமுயன்ற சென்னை வித்தியா இலாகாத் தலைவர் கனம் Stone துரையவர்கள் இதற்கு முற்றும் முரண்பட்டுப் பேசியமை மிக்வும் வியப்பை விளைப்பதாகும்.

நமது இந்தியநாட்டிலுள்ள தாய்மொழிகளுள், பல மிகப்பழமை வாய்ந்தனவும் அளவற்ற இலக்கிய விலக்கணக்கிரந்தங்களையுடையனவுமாவன. தாய்மொழிகளில் அமைந்துள்ளநூல்கள் அவ்வம்மொழிக்குரிய இனத்தார்கண்டறிந்த உயர்ந்தகருத்துக்களையும், அவருட்பெரியார்பலரும் போதித்த அரும்பெரும் உண்மைகளையும் அடக்கிநிற்பனவாம். இவைகள் யாவும் அவ்வவ்வினத்தினர் உலகில் முன்னேற்றமடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன. இத்தகைய இலக்கியங்களைப் படித்துத்தேறி அவைகூறும்வழியொழுகி மாந்தர் முன்னேற்றமடைவது தாய்மொழிப்பயிற்சியினாலேயே எய்தப்பெறுவதொன்றாம். இவ்வுண்மையினை நன்கறிந்தன்றோ ஸ்ரீமான் காந்தியவர்களும் தாம் புதிதாகவாரம்பித்த ஆச்சிரமத்தில் தாய்மொழியினையே கல்விப்பயிற்சிக்கேற்றகருவியாகக்கொண்டனர்.

பின்னரும் பாருங்கள்! ஒவ்வொருமொழியும், ஒவ்வொருநாடும், ஒவ்வொருமக்கட்டொகுதியும் உலகின்நாகரிகத்தைத்வளர்க்கும்தொழிலில் உரிமைபூண்டனவாம். அவ்வம்மக்கள், நினைத்தவுங் கண்டவும், அறிந்தவும் அவரவர் தாய்மொழியிலேயே பொதிந்திருக்கின்றன. ஆகவே, உலகின் நாகரிகவளர்ச்சி, அதன்மாட்டு உலவுகின்ற அவ்வத் தாய்மொழியின்வாயிலானே தொழிற்படுவதன்றிப் பிறவாற்றான் இயலாததாகும்.

அன்றியும், நம் தருமைத்தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின்கல்வியில் ஏற்றஸ்தானத்தைவகிக்கப்பெறாமையால் அவை பெரிதும் வளர்ச்சி குன்றித் தேய்ந்தொழியக்காரணமாகின்றன. ஒரு தேயத்தின் உயர்வும் அதற்குரியமொழியின்வளர்ச்சியும் ஒன்றற்கொன்று நீங்காத சம்பந்தமுடையனவென்பது சரித்திர நூல்வல்லுநர் நன்கறிந்தஉண்மையாம். நமது தாய்மொழியின் ஒளி குன்றி நாளும் தேய்ந்துவருவதாயின் நமது நாடும் தனதுபொலிவிழக்கக்காரணமாமன்றோ. இத்தகைய சம்பவம் நமதுமுயற்சிக்குறைவினால் ஏற்படுவதாயின்; உலகிலுள்ள பற்பலநாட்டினரின்வரிசையில் நாம் சற்றும் ஆண்மையற்றவர்களாகவன்றோ காணப்பெறுவோம்! தம்மையீன்ற நாட்டின் பெருமையினையும் தம் ஆண்மையினையும் ஒருங்கிழக்கத்துணிபவர் நம்மவருள் யார்? வீரவெற்றிகாட்டி அரசவாகைசூடித்திகழ்ந்த தமிழ்ப்பெருவேந்தர்களின் 'வழித்தோன்றல்களாகிய நாமோ இவ்விழிதகைக்கு ஆளாகுவோர்?

கல்வியின்நோக்கமாவது உலகிற் பற்பலவிஷயங்களை ஆய்ந்தறிவதும், நற்குணநற்செய்கைகள் அமையப்பெறுவதும், அறிவாற்றல்களை நம்மாட்டுப் பெருக்கிக்கொள்வதுமாம். பிறமொழிப்பயிற்சி சர்வகலாசங்கத்தினர் நியமிக்கும் பரீக்ஷைகளில் தேறுவதற்குமட்டும் பழக்குவதன்றி வேறுவிசேடப்பிரயோசனம் பயப்பதைக் கண்டிலம். இப்படிப்பெல்லாம் பள்ளிக்கூடத்தோடே நின்றுவிடுகின்றன. ஆயுள்முற்றும் நிலைத்திருந்து நம்பால் இயற்கையிலேயே அமைந்துகிடக்கும் ஆற்றல்களைக்கிளப்பி நம் வாழ்நாளைப் பயன்பெறுத்துவதில்லை.

கல்வியானது பிறமொழிவாயிலாய் எய்தப்பெறுங்கால் அதற்குரிய சக்தி எங்கேயோபோய்விடுகிறது; நமக்குப்பழக்கமில்லாத ஆகாரங்களைச் சாப்பிடுங்கால் அது எவ்வாறு சீரணமாகாதுவெளிப்படுகிறதோ அவ்வாறே கல்வி பிறமொழிவழிப்பெறின் அஃது நமக்குரியதாய்நின்று பயன்பெறுத்துவதில்லை.

அறிவுடைப்பெரியீர்!

இதுகாறும் நாம் தாய்மொழியிற் கல்விபயிலவேண்டுவதன் அவசியத்தினைப்பற்றிப் பேசினோம். இனி இதற்கு ஏதாவது இடர்ப்பாடுகள் உண்டாவென ஆராய்வோம். நம் நாட்டிற் பிறமொழிவாயிலானேயே கல்விகற்கவேண்டுமென்று சாதிப்பவர்கள்கூறும் ஆக்ஷேபணைகள் இரண்

டுண்டு. அவைகள் இந்தியநாட்டிலுள்ள தாய்மொழிகளுள் பெரும்பாலன சாத்திர நூற்கருத்துக்களைவெளியிட ஏற்றவல்லவென்பதும், இவைகளைப்போதிப்பதற்கு ஏற்ற பாடபுத்தகங்கள் இல்லை என்பதுமாம்.

பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பாடஞ்சொல்லிக்கொடுப்பதை நாம் நன்குகவனிப்போமாகில் இவ்வாக்ஷேபங்களுள் முன்னது எத்துணைவலியற்றதென்பது புலப்படும். பிள்ளைகள் விஷயங்களைத் தம்மொழிவாயிலானன்றிப் பிறமொழிகளின்வழியேதான் நன்குணரவல்லவர்கள் என்பது இயற்கைக்கு முற்றும் மாறுனதொருகொள்கையாம். உபாத்தியாயர்கள் உயர்தரப்பாடசாலைகளில் ஒவ்வொரு சாத்திரங்களையும் கற்பிக்குந்தோறும் பிள்ளைகளின் தாய்மொழிவாயிலானே விஸ்தரித்துக்கூறுவது நம்மவருள், பலர்க்கும் அனுபவசித்தம். இஃதிவ்வாறுக, தாய்மொழிகள் சாத்திரக்கருத்துக்களை வெளியிட ஏற்ற கருவிகள் அல்லவென்றுகூறுவது யாங்ஙனம் பொருத்தமுடையதாகும்.

இனி இக்கக்ஷியாருடைய மற்றொருகூற்றையும் விசாரிப்போம். அதாவது தமிழ்முதலியமொழிகளில் மேலைநாட்டுச்சாத்திரங்களைக் கற்பிக்கஏற்ற பாடப்புத்தகங்கள் இல்லை என்பதாம். இக்கொள்கையினை உடையார் உலகில் காரியகாரணநிகழ்ச்சிமுறை அறியாதவர்கள் ஆவார்கள். ஒருரில், உண்ணவோ, உடுக்கவோ, அணியவோ, ஆடவோ, ஒருபொருண்மேல், பொதுவாய்ச் சனங்களுக்கு விழைவுண்டாகுமிடத்துக் கூடியவிரைவில் அவ்வூர்க்கடைகளில் அப்பொருள்கள் வேண்டிய அளவு நிறையப்பெறுவது நாம் தினமும் கண்கூடாகக்காண்பதொன்றும். படிப்பவரின்றிப் பாடப்புத்தகங்கள்எழுத முன்வருவார்யார்? மொழியின்அபிவிருத்திகருதி எழுதத்துணிந்த ஒருசிலபுலவரும் தங்கள் முயற்சியாற் கிடைக்கப்பெறும் ஊதியம் யாதுமின்றுய்த் தம்மைப் பொருளுந்தோற்று வருந்துகின்றதும் நாம் அறியாததோ? நமது சர்வகலாசங்கத்தினர் இப்பொழுது தாய்மொழியினை உயர்தரக்கல்விக்குக் கருவியாகவகுக்குமிடத்துப் பாடப்புத்தகங்கள் விரைவில் வெளிவந்துலவுமென்பதற்குச் சற்றும் தடையின்று. தாய்மொழியிற் சாத்திரங்களைப்போதிப்பதற்கேற்ற பாடப்புத்தகங்கள் எழுதுவது அசாத்தியமென்றுகூறுவது முற்றும் தப்பாகும். பங்காளபாஷையிற் சரித்திரம், பூகோளம், இரசாயனம், பீஜகணிதம், நிலவளவைநூலாதிய பலசாத்திரங்களிலும் பாடப்புத்தகங்கள் ஏற்படவில்லையா? பரோடா இராச்சி

யத்தில் "கலாபலன்" என்னும் கைத்தொழிற்பாடசாலையில் மேனாட்டுச் சாத்திரங்கள் அத்தனையும் தாய்மொழியிலேயே போதிக்கப்பெற வில்லையா? வெகுநாள்வரையில் மிகவும் சாதாரணநிலையிலிருந்த சப்பானியமொழியில் இப்பொழுதேறப்பெறாத மேனாட்டுச்சாத்திர நூல் யாதுளது?

1882-ம் வருஷம் சப்பான்தேயத்துப் பிரதானமந்திரியாகிய கனம் கவுண்ட். ஒகூமாபிரபுஅவர்களால் வஸீடா (Waseda) சர்வகலாசங்கம் தாபிக்கப்பெற்றபொழுது அதிற் போதிப்பதெல்லாம் தாய்மொழியிலேயேயிருக்கவேண்டுமென்பது அதன் தாபகருடையநோக்கங்களுள் ஒன்றும். அப்பொழுது அம்மொழியில் ஏற்ற பாடப்புத்தகங்களில்லாதது அவர்கொண்டகருத்தினைநிறைவேற்ற ஓர் பெருந்தடையாயிருந்தது. ஆனால் கவுண்ட் ஒகூமாபிரபுஅவர்கள் நமது இந்திய சர்வ. கலாசங்கத்தார்களைப்போலப் பிறமொழிவாயிலாய்க் கல்வியூட்டமுயலவில்லை. புத்தகங்களை வெளியிடுவதற்காகவென ஒருசபைகூட்டுவித்து அதன்மூலம் வேண்டியபுத்தகங்களைஎழுதித் தம்மொழியில் எல்லாச் சாத்திர நூல்களையும் அமைத்துக்கொண்டனர். இரண்டுவருடத்திற்கு முன்பு எடுத்தகணக்கில் 180 பண்டிதர்களும் 7000 மாணவர்களும் அங்கு இருப்பதாகத்தெரிந்தது. சப்பானியர்களின்முயற்சி "மனமெங்குளது வழியங்குளது" (Where there is a will there is a way) என்னும் ஆங்கிலப்பழமொழியின் உண்மையினைவிளக்கும்.

நாம் இதுகாறும் கூறிப்போந்தவற்றால், தாய்மொழி கல்விப்பயிற்சிக்கு இன்றியமையாததென்றும், அதற்குத் தாய்மொழிகள் பலவாற்றானும் ஏற்றபெற்றிவாய்ந்தனவென்றும், அம்மொழிகள் சாத்திரப் பயிற்சிக்கு ஏலாதனவென்பது பொருந்தாஉரை என்றும் கண்டோம். இனி நந்தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின் கல்வியில் ஏற்ற ஸ்தானத்தை வகிக்குமாறு நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியினைப்பற்றிச் சிறிதுயோசித்து விஷயத்தை முடிவுசெய்வோம். இந்தியநாட்டிலுள்ள சர்வகலாசங்கங்கள் தாய்மொழிகளை ஆதரிப்பதிலாவது அன்றி அவைகளை முன்னுக்குக்கொண்டுவருவதிலாவது விசேஷ தீவிரங்காட்டியதில்லை. ஆகையால் இவ்வழியில் நம் சர்வகலாசங்கங்களின்உதவியை எதிர்பார்ப்பதில் அதிக பலனில்லையாகும். தாய்மொழிவிருத்திகருதி ஏற்பட்டுள்ளசபைகளே இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத்தக்கன.

நம்நாட்டில் தாய்மொழிகளைவளர்க்க முன்வந்தவரில், வங்காளிய ரும், மகாராட்டிரரும், தெலுங்கர்களுமே தம் முயற்சிவலியால், தத்தம் மொழிகளுக்கு அளவற்ற நன்மைபெறுத்தியவர். தமிழ்நாடு இன்னும் பேச்சளவிலேதான் நிற்கிறது. ஒருசிலர்முயற்சியால் தமிழ்ப்பாடசாலை கள் சில அங்கு மிங்கும் தாபிக்கப்பெற்றுள்ளன. ஆனால் தமிழைமட்டும் போதிக்கும் பாடசாலைகள் இக்காலத்து மிகுதியும் பயன்படுவனவன்று. பிள்ளைகளுக்குச் சீவனோபாயமாகும் வழியொன்றுங்காட்டாது வாளா தமிழைமட்டுங் கற்பிப்பின் அவர்களுக்கு அக்கல்வியினாலாகும் இலௌகிகப்பிரயோசனம் யாது? நங் கரந்தைச்சங்கத்தார் தீர்மானித் திருக்கிறபடி கைத்தொழிலும், தமிழும் ஒருங்கேகற்பிக்கும் கலாசாலை களே இக்காலத்துப் பயன்படுவன. உயர்ந்த கைத்தொழில்களைக் கற் றுக்கொள்ளவேண்டுவோர் அவ்வத்தொழிலுக்கேற்றசாத்திரங்களையும் கற்றுத்தேறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே பலசாத்திரங் களைத் தமிழிற் கற்பிப்பதற்கும், அவைகளைக்கற்பிப்பதற்கேற்ற பாட புத்தகங்களை நம்மொழியில் ஏற்படுத்திக்கொள்ளவும், நமக்கு அவசர முண்டாகிறது. இவ்வாறு இச்சங்கத்தார்கொண்டவழி, நந் தாய் மொழியினைக் கல்விப்பயிற்சிக்குஏற்ற கருவியாக்கமுயன்ற பலவழிக ளுள்ளும் சிறந்ததாமாறு கண்கூடாம்.

அருந்தமிழாளப்பெருந்தகையோர்களே! பன்னெடுநாள்முன்னர் உலகெல்லாம் தன் திப்பியஒளிநிறுத்திவிளங்கிய நம் பண்டைத்தமிழரசி புரிபவமெய்தினள். அவள் நும் அரும்பெறல்அன்னை. நீவிர் அவள்தம் அருமைப்புதல்வர். அவள் துன்புதுடைத்துத் துயரகற்றுவது நுங்கடன். நீவிர் தொல்குடிவந்தீர், துகளில்மரபினீர்! நும்மரபின்சீருக்கிலக்காகு மின்! அன்னைக்குதவமுந்துமின்! அவள் தொண்டுதருசீரினைச்சூடுமின்! புகழ்மின்!! பாடுமின்!!! பரவுமின்!!!!

அறிவுடைப்பெரியீர்!

இனி யான்கூறவல்லதியாது? கரந்தைத்தமிழ்த்தொண்டர் அவர் தம் அரும்பணிமுற்றுவிக்க நும்உதவிவேண்டுகின்றனர். “வம்மின்! புலவீர்! நும்மெய்வருந்திக் கைசெய்து உய்மினே!!” என்னும் பெரியார் கட்டளையினை உங்களுக்கு ஞாபகப்படுத்தி என்பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

# மதுரை நாயக்கர்வம்சத்தரசர்கள்.

# MADURA NAYAK KINGS.

"செந்தமிழ்" (தொகுதி-௧௪ பகுதி ௮ல்) ௬௨௨-ம்பக்கத் தொடர்ச்சி.

## மங்கம்மாள்.

## (1689—1704).

1689-ம் ஆண்டில் முத்தம்மாளுக்கு விஜயரங்கச்சொக்கநாதன் என்ற மகன் பிறந்தான். மூன்றும்மாதத்திலேயே அவனுக்குப் பட்டம் கட்டப்பட்டதாயினும், அவனுக்குப் பிரதிநிதியாக அவன் பிதாமஹியான மங்கம்மாள் ராஜகாரியங்களனைத்தையும் நிர்வஹித்துவந்தாள்.

**மங்கம்மாள் அரசாட்சித்திறமை.** மங்கம்மாள் பெண்பாலாயினும் புத்தி, மனோதைரியம், ராஜதந்திரம் முதலான சிறந்தகுணங்கள்வாய்ந்தவள். அவள்காலத்தில் ராஜ்யமெங்கும் செழிப்புற்றோங்கியது. உள்நாட்டிற் கலகம்விளைந்தாவது அயல்நாடுகளிலிருந்து பகைவர் படையெடுத்துவந்தாவது ராஜ்யத்தின்சீரைக் குலைக்கவில்லை. 'காசிமுதற் கன்னியாகுமரிவரைக்கும் ராமேசுவரம்வரைக்கும்' எங்கும் பாட்டைகளும் சாலைகளும் இவள்காலத்தில் ஏற்பட்டன. இன்றும் 'மங்கம்மாள் சாலைகள்' என்று எங்கும் பிரசித்திபெற்றிருப்பது யாவரும் கேட்டிருக்கலாம். வழிகளிலும் மற்ற இடங்களிலும் ஆங்காங்கு, சத்திரங்கள், சாவடிகள், ஆராமங்கள், குளங்கள், கிணறுகள்முதலியன ஏற்படுத்தப்பட்டன. அந்தணர்க்கும் அறிஞர்க்கும், ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும் விசேஷ தானதர்மங்கள்செய்துவந்தாள்.

**1693. ஜான்-டி-ப்ரிட்டோ (John-De-Britto).** அக்காலத்தில் இராமநாதபுரத்திற் கிழவன் என்றவன் அரசாண்டுவந்தான். அப்பொழுது ஜான்-டி-ப்ரிட்டோ என்னும் பாதிரி ராஜவம்சத்தைச்சேர்ந்த திரயத்தேவனைக் கிறிஸ்தவமதத்திற் சேர்த்துவிட்டான். அப்புதியமத விதிப்படி தன்மனைவிகளில் ஒருத்தியைத்தவிர மற்றவர்களை யவன் நிராஸ்கரித்துவிட்டான். அவர்களுள் ஒருத்தியாகிய கடலை என்பவள், கிழவன்சேதுபதியின்மருமகள். இச்செய்திகேட்ட கிழவன் கோபாவேசத்துடன் டி-ப்ரிட்டோவைச் சிறைப்படுத்தி ராஜ்யத்துக்கப்பாற் கொண்டுபோகச்சொல்லிக் கடைசியாய்ப் பாம்பாற்றின்கரையிலுள்ள உறையூரிற் சிரச்சேதஞ்செய்வித்தான்.

1697. திருவாங்கூர்அரசன் மதுரையரசருக்குக் கப்பங்கட்டி வருவதுவழக்கம். அது சிலவருஷமாகச் செல்லாகாது பாக்கிநின்று விட்டது. மங்கம்மாள் அதை வசூலித்துவருமாறு தன் வடுகர்சைந்யத்தை யனுப்பினாள். இச்சேனை ஆரவாய்பொழிக்கணவாய்வழியாய்க் கற்குள(கொல்லம்?)த்தருகே வந்துசேர்ந்தது. காரியம் மிஞ்சிவிட்டதென்று அரசன் பயந்து பலத்தால்முடியாக்காரியத்தை வஞ்சனையாற் சாதித்துக்கொள்ளஎண்ணி,வடுகர்சேனைத்தலைவருடன் நட்புப்பாராட்டியவர்களைக் கோட்டைக்குள் அழைத்துச்சென்றான். அப்பொழுது திருவாங்கூர் அரசனுக்கு 'எட்டுவீட்டுப்பிள்ளைமார்' என்ற எட்டுப்பரம்பரைமந்திரிகளில் ஆகாத சிலமந்திரிகள் வலுத்தவராயிருந்தனர். ஒரே கல்லால் இரண்டுகுருவியடிப்பதுபோலத் திருவாங்கூர்அரசன் ஒரே வஞ்சனையால் இரண்டுகாரியங்களைச் சாதித்துக்கொண்டான். வடுகர் சேனைத்தலைவருடன் கபடாலோசனைசெய்து அவர்களைக்கொண்டு, அம்மந்திரிகளைக் கொலைசெய்வித்தான். பிறகு ஒருநாள் வடுகர்சேனை பந்தோபஸ்தில்லாமல் உல்லாசமாய்க் கற்குளம்கோட்டைக்குள் திரிந்து கொண்டிருக்கையில் திருவாங்கூர்ச்சேனை திடீரென்றுதாக்கி, வடுகர் சேனைமுழுவதையும் ஈவு இரக்கமின்றி நாசஞ்செய்துவிட்டது. தப்பியோடிய சிலர்மூலமாய் இக்கொடுஞ்செய்திகேட்ட மங்கம்மாள், திருவாங்கூர்அரசனுக்குத் தக்கசிக்ஷைசெய்யக்கருதி ஓர்பெருத்தசேனையைத் தளவாய் நரசப்பையரோடு 1698-ல் அனுப்பினாள். தளவாய் நரசப்பையர் திருவாங்கூர்ஸமஸ்தானத்திற் பிரவேசித்துக் கடும்போர் புரிந்து ஜயித்து, மிகுந்ததிரவியத்துடனும் ஜயகோலத்துடனும் திருச்சிராப்பள்ளிவந்துசேர்ந்தார்.

1700-ம்ஆண்டில் பூச்சே (Bouchet) என்ற பாதிரி, ப்ராம்மண மந்திரியான தளவாய் நரசப்பையர்பேட்டிபெற்றுக் காணிக்கைகள் செலுத்தி, மரியாதைபெற்றுச் சென்றார்.

1700-ல் தஞ்சையுத்தம். இதன்காரணம் இன்னதென்று தெரியவில்லை. இராமநாதபுரத்துக்கும் தஞ்சைக்கும்ஏற்பட்ட எல்லைவழக்கால் ஏற்பட்டிருக்கலாமென்று மதிக்கப்படுகின்றது. 1700-ம் ஆண்டில் நரசப்பையர் தன்சேனைகளுடன் காவேரியின் தென்கரையில் தங்கியிருந்தார். எதிரே வடகரையில் தஞ்சைச்சேனை காத்திருந்தது. தஞ்சைச் சேனையிற் குதிரைப்படை அதிகமாயிருந்ததால் நரசப்பையர் அதை

எதிர்க்கத்துணியாமல், தருணம்பார்த்திருந்தார். ஒருசமயத்தில் தஞ்சைச்சேனை பிரிந்து மதுரைச்சேனையை இருபுறமும்சூழஎண்ணிக் காவேரியைத்தாண்டிவந்தது. நரசப்பையர் ரகஸ்யமாய்க் காவேரியைத் தாண்டி நேரே தஞ்சையைத் தாக்கினார். பிரிந்திருந்த தஞ்சைச்சேனை மறுபடி தங்கள் நகரைக்காக்க ஓடிவந்தது. காவேரியில் திடீரென்று வெள்ளம்வந்து தஞ்சைச்சேனையில் அநேகரை அடித்துக்கொண்டு போயிற்று. நரசப்பையரும் மிகுந்தவரைத் தாக்கி நாசஞ்செய்தார். பிறகு தஞ்சைமன்னன் சமாதானம்செய்துகொள்ளவிரும்பினான். சமாதானம்செய்துகொண்டு வெற்றிக்கோலத்துடன் நரசப்பையர் ஊர் வந்துசேர்ந்தார்.

1701-ம்ஆண்டில் தஞ்சைமன்னனும் மதுரை மங்கம்மாளும் மைசூர் அரசனுக்குவிரோதமாய் யுத்தஉடன்படிக்கைசெய்துகொண்டார்கள். இதற்குக்காரணம் மைசூர்அரசன், காவேரிநதியின்குறுக்கே ஓர் பேரணைகட்டித் தஞ்சை திருச்சிராப்பள்ளி என்னும் நாடுகளுக்குக் காவேரியிற் போதுமானஜலம்வராதபடி தடுத்துவிட்டதே. இதனாற் கோரமானயுத்தம் நேரிடக்கூடியதாயிருந்தது. காவேரியில் திடீரென்று பெருத்தவெள்ளம்வந்து யுத்தகாரணமான அப்பேரணையை அடித்துக் கொண்டுபோய்விட்டபடியால் யுத்தம் நேரவில்லை.

1702. **நரசப்பையர்மரணம்.** இராமநாதபுரம் கிழவன்சேதுபதியை யடக்கும்பொருட்டு, நரசப்பையரும் தஞ்சைமன்னனும் தக்கசேனைகளுடன் இராமநாதபுரத்தின்மீது படையெடுத்துச்சென்றார்கள். மறவர்கள் ராஜாபிமானத்துடனும் தேசாபிமானத்துடனும் ஜாதிக்கட்டுடனும் ஏகோபித்துக் கடும்போர்புரிந்தார்கள். அப்போரில் நரசப்பையர் உயிரிழந்தார். நரசப்பையர் மரணத்தால் மதுரைச்சமஸ்தானத்துக்கே ஒருபெருங்குறையேற்பட்டது. மதுரைச்சேனை தோல்வியடைந்தது.

**அச்சையன்.** நரசப்பையர் இறந்தபின் அச்சையன் என்பவர் தளவாய்ஸ்தானத்தை வஹித்துவந்தார். இவ்வாறு இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தன. 1704 (1705?)-ம்ஆண்டில், விஜயரங்கச்சொக்கநாதன் பட்டத்துக்குரிய வயதினனானான். அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு, மங்கம்மாள், மதுரையில் தன் அரண்மனையில் தானதர்மங்கள் செய்துகொண்டு வைதிகச்ரத்தையுடன் காலங்கழித்தாள்.

## விஜயரங்கச்சொக்கநாதன்.
## (1704—1731)

1704-ம் ஆண்டில் விஜயரங்கச்சொக்கநாதன் ராஜ்யத்தைக் கைக்கொண்டான். அதே வருஷத்தில் மங்கம்மாளும் காலஞ்சென்றாள். இவன் தெய்வபக்தியும் மதவிஷயங்களிற் சிரத்தையு முள்ளவன். புண்ய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வதும் விசேஷ தானதர்மங்கள் செய்வது மாய் இவன்காலங் கழிந்துவந்தது.

1709-ம் ஆண்டில், அரசன் திறமைக்குறைவால் மதுரைநகரிற் கலகமுண்டாயிற்று. மந்திரிகள் அரசனுடனொத்து ராஜ்யபாரத்தை வஹிக்கவில்லை. இவன்காலத்தில் தளவாயாயிருந்த நாரணப்பையனைத் தொலைத்து, கஸ்தூரிரங்கநாயக்கன் தளவாய் ஆனான். அவனையும் தொலைத்து வெங்கடராகவாசாரியார் தளவாய் ஆனார். இவ்வாறு நிர்வாஹஅதிகாரிகளுள் ஒற்றுமையில்லாமல், தேசம் சீர்குலைந்துவிட்டது.

பன்னிரண்டுவருஷப்பஞ்சம். (1709—1720) இக்காலத்தில் மறவர்நாட்டிற் கொடும்பஞ்சம்நேர்ந்தது. ஜனங்கள் நாட்டைவிட்டோடி மதுரைநாட்டிலும் தஞ்சைநாட்டிலும் குடியேறினார்கள்.

1710-ம் ஆண்டில் இராமநாதபுரத்தைஆண்ட கிழவன்சேதுபதி மரணமடைந்தான். அவனுக்குவயது 80-க்கு மேலாயிருந்தது. அவன் மனைவியரில் 47 பேர் அவனுடன் உடன்கட்டையேறினதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கிழவன் இறக்குமுன் தன்போகஸ்திரீபுத்ரனை பவானி சங்கரத்தேவனைத் தன்வாரிஸாய்நியமித்தான். ஆனால் மறவர்கள் அதை யங்கீகரிக்காததால் அவர்களிஷ்டப்படி ஸ்வீகாரபுத்ரனை விஜயரகுநாதன் என்றவன் சேதுபதியாய் நியமனமானான்.

1720-ம் ஆண்டிற் பஞ்சம் நிவிர்த்தியாயிற்று. அதே வருஷத்திற் கலகமுமுண்டாயிற்று. பவானிசங்கரத்தேவன் ஏவுதலாற் புதுக்கோட்டைஅரசன் தஞ்சைமன்னனுடன்சேர்ந்துகொண்டு சேதுபதி மேற் படையெடுத்துவந்தான். விஜயரகுநாதன் அறந்தாங்கியில் அவர்களை எதிர்த்துப் போர்புரிகையிற் சேனையிற் கொள்ளைநோய் பரவிற்று. சேதுபதி நகருக்குத்திரும்பிவந்து சிறிதுகாலத்துக்குள் சந்ததியில்லாமல் இறந்துபோனான்.

மறுபடி இராமநாதபுர ஆட்சியைப்பற்றித் தாண்டத்தேவனுக்கும் பவானிசங்கரத்தேவனுக்கும் விவாதம்நேர்ந்தது. புதுக்கோட்டைத் தொண்டமானும் மதுரையரசனும் தாண்டத்தேவனுடன்சேர்ந்து கொண்டார்கள். பவானிசங்கரன் தஞ்சையரசன்சகாயம்பெற்றான். இரண்டுசேனைகளும்செய்தபோரிற் பவானிசங்கரத்தேவன்கட்சி ஜயித்தது. பவானிசங்கரன் மறுபடியும் சேதுபதியானான்.

சிவகங்கைச்சீமையுண்டானது. 1729. பவானிசங்கரனுக்கும் சசிவர்ணப்பெரியஉடையான் என்ற ஓர் பாளையக்காரனுக்கும் விரோதமுண்டாயிற்று. சசிவர்ணன் தன்பாளையத்தினின்றும் துரத்தப்பட்டுத் தஞ்சையில் அடைக்கலம்புகுந்து அங்கிருந்த முன் சேதுபதியின் மாமனான கட்டையத்தேவனுடன்சேர்ந்துகொண்டு தஞ்சைச்சேனையுதவிபெற்று இருவரும் பவானிசங்கரன்மேற் படையெடுத்துவந்தார்கள். உறையூரில்நடந்தபோரிற் பவானிசங்கரன் தோல்வியடைந்து கைதியாக்கப்பட்டான். இப்போருக்குப்பின் இராமநாதபுரம்ராஜ்யமானது பங்குபோடப்பட்டது. பாம்பாற்றுக்குவடக்கேயுள்ள சீமையெல்லாம் தஞ்சையைச்சேர்ந்துவிட்டது. மீதமுள்ளதில் 5-ல் 3 பங்கு கட்டையத்தேவனுக்கும், 5-ல் 2 பங்கு சசிவர்ணத்தேவனுக்கும் கிடைத்தன. இதுதான் சிவகெங்கைச் சீமையெனப்படும்.

1713, 1717-ம் ஆண்டுகளிற்பிறந்த இரண்டு தெலுங்குத் தாம்ர சாஸனங்களால், மதுரைராஜ்யமானது அக்காலத்திற் சந்திரகிரிஅரசுக்குட்பட்டதெனத் தெரியவருகின்றது. அச்சாஸனங்கள் மதுரைத் தேவஸ்தானத்திலிருக்கின்றன.

1731-ம்ஆண்டில் விஜயரங்கச்சொக்கநாதன் சந்ததியின்றி மரணமடைந்தான். அவன்மனைவி மீனாக்ஷி பட்டத்துக்குவந்தாள்.

---

## மீனாக்ஷி.
## (1731—1736)

1731-ம்ஆண்டிற் சொக்கநாதன்இறந்ததும் அவன்மனைவி மீனாக்ஷி வாரிஸ்க்ரமமாய்ப் பட்டத்துக்குவந்தாள். தனதுகணவன்கொடுத்துச் சென்ற அநுமதிப்படி ராஜவம்சத்தைச்சேர்ந்த வங்காருதிருமலையின் மகனை ஸ்வீகாரஞ்செய்துகொண்டாள். தனதுசகோதரன் வெங்கடராயப்பெருமாள்நாயக்கன் மூலமாய் அரசாட்சிசெலுத்திவந்தாள்.

கட்சி. மீனாக்ஷிக்குவிரோதமாய் ஒருகட்சி ஏற்பட்டது. அதற்குத் தலைவன் தளவாய் வெங்கடராயாசாரியார் என்பவர். மீனாக்ஷியைப் பட்டத்தினின்றும்நீக்கி வங்காருதிருமலையைப் பட்டத்தில்வைக்க வேண்டுமென்பது இக்கட்சிக்காரர்கொள்கை. ராணி திருச்சிராப்பள்ளிக்கோட்டையிலிருக்கையில் திருமலையின்கட்சிக்காரர், அவளறியுமுன்னர்க் கோட்டைக்குள், பலாத்காரமாய்ப்புகுந்துவிட்டார்கள். சங்கதிதெரிந்தபிறகு நடந்தசண்டையில், திருமலையையும் அவன்கட்சிக்காரரையும் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள்.

அக்காலத்தில் ஆர்க்காட்டுச்சீமையை நவாப் தோஸ்த்ஆலிகான் அரசாண்டுகொண்டிருந்தான். அவன் தக்ஷிணதேசமுழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற பேராசைகொண்டு தன் மூத்தமகனை ஸதர்ஆலிகானையும், தன்மாப்பிள்ளையும் மந்திரியுமான சந்தாஸாஹிபையும் தக்கசேனையுடன் அனுப்பினன். மஹமதியவீரர் தஞ்சையைப் பிடித்துக்கொண்டார்கள். திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும் தெற்கே திருவாங்கூர்வரைசென்று ஊர்களையும் பட்டணங்களையும் நாசஞ்செய்துவிட்டுத் தக்க கொள்ளைப்பொருளுடன் திரும்பிவந்தார்கள்.

1734-ம்௵ வங்காருதிருமலை, ஸதர்ஆலிகானுடன், ஒரு ரகஸ்ய ஒப்பந்தம் செய்துகொண்டான். துருக்கர்தலைவன் மீனாக்ஷியைப் பட்டத்தினின்றும்விலக்கித் தனக்குப் பட்டங்கட்டினால், அதற்கு ப்ரதிப்ரயோசனமாய்த் திருமலை 30 லட்சம்ரூபாய்கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஸதர்ஆலிகான் ஓர்யுக்திசெய்தான். மதுரைஅரசாட்சியைப்பற்றித் திருமலைக்கும் மீனாக்ஷிக்கும்ஏற்பட்ட விவாதத்தைத்தீர்த்துவைக்கத் தான் வந்திருப்பதால் அதில் இருதரப்பிலும் ஸாக்ஷியம்சொல்லக்கூடியவர்கள் தன்முன்ஆஜராகும்படிக்குப் பறையடிக்கச்செய்தான். இதை யொன்றும்கவனியாது மீனாக்ஷி அலக்ஷ்யமாயிருந்துவிட்டாள். பேருக்கு ஒரு விசாரணைமாதிரிசெய்துவிட்டு எதிர்பார்த்தவண்ணமே திருமலைக்கு அநுகூலமாய்த் தீர்ப்புச்சொல்லிவிட்டான். ஒப்பந்தப்படி திருமலைக்குப் பட்டங்கட்டிவிட்டு 30 லக்ஷரூபாயைவாங்கிவரும்படி சந்தாஸாஹிபைநிறுத்திவிட்டு ஸதர்ஆலிகான் ஆர்க்காடுபோய்ச்சேர்ந்தான்.

காரியம் மிஞ்சிவிட்டதென்றுபயந்து மீனாக்ஷி சந்தாஸாஹிபுடன் ஓர் ரகஸ்யஒப்பந்தம்செய்தாள். மீனாக்ஷி கோடிரூபாய்கொடுத்துவிடு

கிறது என்றும், அதைப்பெற்றுக்கொண்டு சந்தாஸாஹிப் ஒன்றும்செய்யாமற் போய்விடுகிறது என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. வஞ்சனையிருந்த சந்தாஸாஹிப் அதற் கிணங்கினான். ஆயினும் மீனாக்ஷி சந்தேகங்கொண்டு அவனைக் கோரான்மேல் ப்ரமாணம்செய்யச்சொன்னாள். அங்ஙனமே காவேரிக்கரையிலுள்ள தளவாய்மண்டபத்திற் சந்தாஸாஹிப் ப்ரமாணம்செய்துகொடுத்தான். ப்ரமாணம் தன்னைக் கட்டுப்படுத்தாமலிருக்கும்பொருட்டு ஒருசெங்கல்லைப் பட்டுத்துணியாற்சுற்றி அதன் மேல் ப்ரமாணம்செய்து ஏமாற்றிவிட்டதாகவும் சொல்லுவதுண்டு.

சந்தாஸாஹிப் கோட்டைக்குள் விடப்பட்டான். கோட்டையும், அதிலுள்ள யானைகுதிரைகளும் கஜானாக்களும் தன்கைவசமானதும், தன் அந்தரங்கமான கபடஎண்ணத்தைவெளியிட்டான். தான் சொந்தம் பாராட்டவந்தவனேயொழிய மீனாக்ஷியையாவது திருமலையையாவது காப்பாற்றவந்தவனல்லவென்று தெரிந்துவிட்டது. திருமலையும் அவன் மகனும் மதுரைக்கு ஓடிவிட்டார்கள். பாவம்! ராணி மீனாக்ஷி கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டாள். மீனாக்ஷியின் அரண்மனையைக் காக்கத்தக்கசேனையை நிறுத்திவிட்டு, மிகுந்தசேனையுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டான்.

மதுரையிலிருந்து ராணிகட்சியைச்சேர்ந்த கோவிந்தையர், ராவணையர்என்ற இரண்டுசேனாபதிகள் 8000 குதிரைப்படையுடன் திண்டுக்கற் பக்கத்தில் துருக்கர்படையைஎதிர்த்துத் தோற்றுப்போனார்கள். துருக்கர் மதுரைநோக்கிவரவே திருமலையின் இன்னொருபடை, அவர்களை அம்மையநாயக்கனூரில் எதிர்த்து வீராவேசத்துடன்போர்புரிந்தும் கடைசியில் தோற்றுப்போயிற்று. சந்தாஸாஹிப் மதுரைவந்து சேர்ந்தான். திருமலை நகரைவிட்டுத் தப்பிஓடிச் சிவகெங்கைபோய்ச் சேரவே, அங்கிருந்து அவன் வெள்ளிக்குறிச்சியில் ஒளித்துவைக்கப் பட்டான். மதுரைத்தேசமுழுதும் மஹமதியராற் பாழடைந்தது.

மதுரைராஜ்யத்துக்குத் தானே அதிகாரியென்று பஹிரங்கமாய்ப் பறையறைவித்தான். மீனாக்ஷி உயிருடன்இருக்கும்வரை யாராவது கலகஞ்செய்துகொண்டேயிருப்பார்களென்றெண்ணி, அவளைக் கொலைசெய்ய உத்தேசித்தான். ஆனால் அவன்கையாற்சாகும்வரை காத்திராமல், மீனாக்ஷி தானே விஷம்உண்டு இறந்தாள்.

திருமலை, ஸதாரா மஹாராஷ்ட்ரர்களைத் தஞ்சமடைந்து அவர்களுதவியைவேண்டினான். தோஸ்த்அலிகானுக்குத் தக்கசிக்ஷைவிதிக்க

வேண்டுமென்று முன்னமேயே ஹைதராபாத் நிஜாம்உல்மல்க் கேட்டுக் கொண்டிருந்தான். கர்னாடதேசத்தின்மீது படையெடுக்கத் தக்கசமயமும் காரணமும் ஏற்பட்டன. ராகோஜிபோன்ஸ்லே என்னும் மஹாராஷ்டிரத்தலைவன் 60000 குதிரைப்படையுடனும் ஒன்றரைலட்சம் காலாட்களுடனும் 1739-ம்வருஷம் கர்னாடதேசத்தின்மீது படையெடுத்து வந்தான். இதையறிந்த தோஸ்த்ஆலிகான் முக்யமான கணவாய்களை மஹம்மதியர்சேனையைக்கொண்டு காக்கச்செய்து, எதிர்பாராதஇடத்தில் ஓர் ஹிந்துசேனையை நிறுத்திவைத்திருந்தான்.

இந்தரஹஸ்யமறிந்த மஹாராஷ்ட்ரத்தலைவன் ஹிந்துசேனைத்தலைவனிடம்சென்று அவனிடம் பலவிதமாய்ச் சினேகம்பாராட்டி, இந்துவுடன் இந்து எதிர்ப்பது சரியல்ல எல்லோரும் ஏகோபித்து மஹம்மதியரைஎதிர்த்துத் துரத்தவேண்டுமென்று போதித்தான். ஹிந்துசேனைத் தலைவன் அதற்கிணங்கிச் சண்டையிடாமலே வழிவிட்டுவிட்டான்.

புதுச்சேரிப்பக்கத்தில், துருக்கர்படைக்கும் மஹாராஷ்ட்ரர்படைக்கும் கோரமானயுத்தம் நடந்தது. தோஸ்த்ஆலிகானும் அநேக துருக்க வீரரும் சண்டையில் மடிந்தார்கள். துருக்கர் தோல்வியடைந்தார்கள். இரண்டுநாளைக்குப்பிறகு ஸதர்ஆலிகான் சேனையுடன் அவ்விடம்வந்தான். தகப்பன் அபஜயமானதறிந்து பயந்து அவன் வேலூருக்கு ஓடிவிட்டான். மஹாராஷ்ட்ரர் அவனைத் துரத்திச்சென்று தங்களுக்குக் கோடிரூபாய் ஸதர்ஆலிகான் கொடுக்கவேண்டுமென்றும், தஞ்சை மதுரைராஜ்யங்களை உரியவர்களிடம் விட்டுவிடவேண்டுமென்றும் உடன்படிக்கைசெய்தார்கள்.

திருச்சிராப்பள்ளியைக் காத்துக்கொண்டிருந்த சந்தாஸாஹிப் அதற்கிணங்கவில்லை. உடனே மஹாராஷ்ட்ரர் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார்கள். சந்தாஸாஹிப் சகோதரன் பாதாஸாஹிப் தமையனுக்கு உதவிபுரியவந்தான். ஆனால் யுத்தத்தில் மடிந்தான். மஹாராஷ்ட்ரர் 1741ம்ஆண்டில் திருச்சிராப்பள்ளிக்கோட்டையைப் பிடித்துக்கொண்டு சந்தாஸாஹிபைச் சிறைப்படுத்தி ஸதாராவுக்கு அனுப்பிவிட்டார்கள். ராகோஜிபோன்ஸலே அவஸரமாய் ஸதாராவுக்குப் போகநேர்ந்தது. திருமலையோ ஆளத்திறமையற்று ஓடிஒழிந்துவிட்டான். ஆர்க்காட்டுநவாபைச்சேர்ந்தவர்களும் ஆளமுடியவில்லை. இந்நிலைமையில் 1741-ம்ஆண்டுக்குப்பிறகு மதுரைராஜ்யமானது சிதிலமடைந்து பலவீரர்களாற் பங்குபோடப்பட்டது. அக்காலத்தில் மதுரைத்தேசம்முழுதும், பஞ்சம், கொலை, கொள்ளை, கொள்ளைநோய் முதலான பலதுன்பங்களுக்கு இரையாயிற்று.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B.L.

# திருவெண்காட்டுச்சாசனங்கள்.

அடியிற்பதித்திருக்கும் சாஸனமானது திருவெண்காட்டு ஈசுவரன் கோவிலின் முதற்பிராகாரத்தின் வடசுவரில் வரைந்துள்ளது. எண்ணெய், சுண்ணாம்புமுதலிய அழுக்குகளின்றி, எழுத்துக்கள் மறைந்து போகாது நல்லஸ்திதியி லிருக்கின்றன. இது இராஜகேசரிவர்மனாகிய இராஜராஜன்காலத்தது; இவ்வரசனுடைய மெய்க்கீர்த்தி இதுவரை வெளிவராதிருப்பதாலும், நல்ல தமிழ்ச்செய்யுளாயிருப்பதாலும், தமிழபிமானிகட்கு இன்பந்தருமென்று பதிக்கப்படுகிறது. இச்சாஸனம் இராஜகேஸரிவர்மனாகிய இராஜராஜன் ஆட்சியின் நாலாமாண்டில் விருச்சிகநாயிற்றுப் பூர்வபக்ஷத்தில், தசமியும் திங்கட்கிழமையுங்கூடிய இரேவதிநாளிற் பிறந்தது. இவ்விவரங்களைக்கொண்டு ஸ்ரீமான் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள், அடியில்வருமாறு காலகணனம் செய்திருக்கிறார்கள். "பூர்வபக்ஷத்துத் தசமியானது கிருத்திகமாதத்து 22-வது நாளாகும். அன்று தசமி சூரியோதயமாய் 47 நாழிகைக்குப்பின் கழிந்தது: இரேவதிநக்ஷத்திரமானது திங்கட்கிழமை சூரியோதயமாய் 25 நாழிகைக்குப்பின்தொடங்கிச் செவ்வாய்க்கிழமை $21\frac{1}{2}$ நாழிகைக்குப் பிறகு முடிந்தது. இவ்விசேஷங்களைக்கொண்டுள்ளநாளானது மூன்றாம் இராஜராஜன்ஆட்சியின் 4-வதுவருஷத்தில், அதாவது கி. பி. 1219ல், நவம்பர்மாதம் 18ம்தேதி திங்கட்கிழமையேயன்றி வேறொருநாளுமல்ல: மற்றைநாட்களில் மேற்கூறிய திதி வார நக்ஷத்திராதிகள் கூடிவருவனவாகக்காணேம். ஆகையால், இச்சாஸனம் இரண்டாம் இராஜராஜன் காலத்தது என்று சொல்லவியலாது. மூன்றாம்இராஜராஜனதேஎன்பதிற் சம்சயமில்லை." பிள்ளையவர்கள்செய்திருக்கும் காலநிர்ணயத்தாற் சரித்திரமொன்றும் அடங்கியிராத இம்மெய்க்கீர்த்தியுடையவரசன் மூன்றாம் இராஜராஜனேயென்று தெளிவாகும்.

## திருவெண்காட்டுச்சாசனம்.

### I

### மெய்க்கீர்த்தி

(1) *சீர்மன்னு மலர்மகளும் சிறந்ததனி நிலச்செல்வியும்
பார்மன்னு பசுந்துளவச் சயமடந்தையு மனங்களிப்பப்
புகழ்மடந்தை புகழ்பாடப் புலமகளும் பூசுரரு
முகமலர்ந்து கண்களிப்ப முனிவர்கணந் துதியெடுப்பத்
தனித்துலகை முழுதாளத் தடங்கரைப்பா(2)ற் கடல்பிரிந்த
பனித்துளவ நறுந்தாமப் பரந்தாம மெனவந்து
கடிமுரச மொருமூன்றுங் கடனான்கு மெனமுழங்கப்
படிமுழுது மிருணீங்கப் பருதிதனிக் குலம்விளங்கக்
கொடியேந்து புலியிமயக் குலவரைமேல் வீற்றிருப்ப
முடிவேந்த ரடிசூட முறைமையினால் (3) முடிசூடி
வடவரையின் படவரவின் மணிமுடியும் பொடியாகத்
தடவரையின் நெடுந்தோளின் வாரணிகலன் தரித்தருளிப்
பாரேழும் பொழிலேழும் படிபரிக்குங் கிரியேழு
நீரேழுந் தனிகவித்து நிறைமதிவெண் குடைநிழற்றப்
புறவாழியும் வரையாழியும் பூதலமும் பொதுநீக்கி
அறவாழியுஞ் (4) செங்கோலு மனந்தகற்ப [காலம்?]புரக்க
ஒப்பரிய மறைநாலும் உரைதிறம்பா மனுநூலுஞ்
செப்பரிய வடகலையும் தென்கலையுந் தலையெடுப்ப
நீதிதரு குலநான்கும் நிலைநான்கு நிலைநிற்ப
ஆதியுகங் குடிபுகுத அறுசமயந் தழைத்தோங்கப்
பொருதுறையுஞ் சினவேங்கையு மட(5)மானும் புகுந்துடனே
யொருதுறைநீ ரினிதுண்டு பகையின்றி யுறவாடப்
புயல்வாரி பொழிவிக்கும் பொற்றொடியவர் கற்புயர
வயல்வாரி வளம்பெருகி மறையவர்முத் தமிழ்வளர்க்கும்
நெறிமுறைமை யினிதீண்டித் தனதாணை திசைநடப்ப
நிருபர்குலம் பெலம்ப[டா] நிலங்காவற் றொ(6)ழில்பூண்டு
செருவலியில் முருகனென்றுந் திருவடிவில் மதனனென்றும்

* இச்செய்யுணடை கொம்மைப்பாட்டிசையுடையதாய்ச்சென்று குறளடியான் முடிந்துளது.

பெருகொளியிற் பருதியென்றும் பெருந்தகைமையிற் றருமனென்றும்
தண்ணளியில் மதியென்றும் தனந்தருதலிற் ரூயென்றும்
மன்னுலகத் திகல்வேந்தரு மறைவாணரும் போற்றெடுப்ப
மீனவருஞ் சிங்களரும் விக்(7)கலரும் கற்கடரும்
வானவருங் குந்தளரும் வங்களரும் பார்மருங்கு
பல்லவரும் மாகதரும் பாஞ்சாலரும் காம்போதரும்
கொல்லணரும் த்ரைஹஸ்தரும் கூபகருஞ் சாவகரும்
பண்டையரும் திருவடிக்கீழ்ப் பரிந்துதிறை சொரிந்திறைஞ்ச
எண்டிசையும் புரந்தளிக்கும் இராஜராஜதுங்கன் ராஜராஜன்
மலைபேரிலும் வான்பேரிலும் (8)மாதுரங்கா......
நிலைபேரி லும்பேராத நெஞ்சுடைய செஞ்சேவகன்
அளவில்பெரும் புகழாகாம மங்கையருக் கரசாகி
உலகுடைய பெருமானுடன் ஒக்கமணி முடிகவித்தாள்
உறந்தைவள நகரம்போல் உலகமொரு பதினான்கும்
பிறந்துடையாள் இராஜராஜன் பிரியாவெனைக்காறி
இயல்வாழவும் இசைவாழவும் (9)இமயமலை மகளறத்தின்
செயல்வாழவும் ராஜராஜன் திருத்தாலி பெற்றுடையார்
அரச ரிறைஞ்சழக னருணிலைறந்த வுலகுதன்னில்
உரைசிறந்த தனியானை உடனானை பெற்றுடையாள்
தவளவய பரிகண்டற காத்தறிக்குங் கற்பகாலம்
புவனியெழத் தனதாணையிற் புரக்குவந்தவந் தப்புரப்பெருமாள்
பொய்யாநெடு நிலனான்கும் (10)பொருகுடையி னிருநான்கும்
மாதிரமும் விளங்கவந்த வாணர்குல நிலைவிளக்கு
குலகரியெட் டும்பரித்த குலவட்ட மலர்கவிதைச்.
சக்கரவர்த்த னந்தப்புரஸுக்ரவர்த்திகாசெறிய
கொடயலவானவாச்சி குலதிபாரதாராதிபதிமா [ள்
மாதேவியார் தொழுதிறைஞ்சும் மடந்தைமங்கையர் தம்பெருமா
அவ்வுலகத் (11) தருந்ததியும் அதிசயிக்கும் பெருங்கற்பா
லிவ்வுலகத் தருந்ததியென விசைதந்த திசைவிளங்கத்
திருந்தியவேல் இராஜராஜநு ராஜேந்த்ரநு திருவருளெனும்
பெருந்தனிப்பாற் கடல்படிந்து விளையாடும் பெடையன்னம்
ஆணையெங்கும் தனதாக்கிய ஆதிஇராஜநு மாதேவி

வளர [வ]ங்கசூளாமணி மறையவர்தொழுஞ் சிந்தாமணி
(12) சோணாடன் இராஜராஜனு சரிமலர்ப்பூந் துழாய்மார்பில்
பூணார மெனவிளங்கிய புவனமுழு துடையாளும்
அனந்தகற்பக நாள்பிரியாது
மனங்களித்து மணம்புணரச்
செம்பொன்வீர ஸிம்ஹாஸனத்துப்

புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோராஜகேஸரி வந்மராந ஸ்ரீ ஸார்வபௌமசக்ரவர்த்தி[க]ள்(ஃ) ஸ்ரீராஜராஜதேவ(13)வற்கு யாண்டு நாலாவது வ்ருஶ்சிகநா[ய*]ற்று பூர்வபக்ஷத்து ஏகாதசியும் திங்கட்கிழமையும்பெற்ற இரேவதிநாள் இராஜாசிராஜவளநாட்டு உடையார்திருவெண்காடுடையநாயனார்க்கு, இராஜேந்த்ரசோழவளநாட்டுச் சோழமங்கலமுடையான் தாயிலுநல்லபெருமாளான இளங்கோவேளார்பாரிவை மாத்தூர் கிழவன் (14) அரையன் உதையஞ்செய்தானான சோழகோனார்மகளார் திருவெண்காட்டுநாச்சியார் (என்பவள் திருவெண்காட்டு ஈசுவரர்க்கு ஒரு திருநந்தாவிளக்குவைத்தாளென்று சொல்லப்பட்டிருக்கிறது.)

---

திருவெண்காட்டு இரண்டாவது மூன்றாவதுசாஸனங்கள், இராஜகேஸரிவர்மனான வீரராஜேந்திரன்காலத்தன. இவ்வரசன்ஆட்சியின் மூன்றுமாண்டில், திருவெண்காட்டுநங்கைமகன் சிவலோகநாதன் என்பவன் அரசனுக்குவிண்ணப்பஞ்செய்து, திருவெண்காடுடையீசுவரருடைய தேவதானநிலங்களிற் பிரியும் அந்தராயம்முதலாயவரிகளினின்றும் வரும்ஆதாயத்தை வீரராஜேந்திரதேவருடைய பிறந்தநாளான ஆயிலியநக்ஷத்திரத்தின்நாள்களில் மாதந்தோறும் ஈசுவரர்க்குத் திருநாள், திருப்பள்ளியெழுச்சி, முதலியசெய்விக்கவும், பத்துச்சிவயோகிகட்கு அமுதுசெய்விக்கவும், ஐவர் பிராமணர்கட்குச் சந்தர்ப்பணைசெய்வதற்கும் மற்றும் பலவிஷயங்களில் விநியோகமாகும்படிக்கும் உத்தரவு பெற்று, இவைநடப்பிக்க ஏற்பாடுசெய்தான். இச்சிவலோகநாதனே, அரசன்வீரராஜேந்திரன் ஜன்மநக்ஷத்திரத்திநாட்களில் திருவெண்காட்டீசுரர்க்குத் தேன், பால்முதலியபதார்த்தங்களால் அபிஷேகஞ்செய்விக்கவும் திட்டஞ்செய்தான். வீரராஜேந்திரன்காலம், சரித்திரம் முதலியவைகளைச் "சோழவம்சசரித்திரத்"திற் கண்டுகொள்க.

---

## திருவெண்காட்டுச்சாசனம்.

### II

(1) ஸ்வஸ்திஸ்ரீ [*] வீரராஜேந்த்ர ஜநகேஸரி வ்யாபாத திரஸ்காரம்,
ஸ்ரீசைவத்வ தபோநிதேஸ்ய கீர்த்தேர் (2) த்வஸ்தவீரஸ ॥

பூப்பாவை கோன்வீர ராஜேந்த்ர ரர்க்காப் புராரிகல
நா(3)ப்பால் னவிற்றுஞ் சிவலோக நாத னெனந(ன்) றுதேன்
ஆப்பாலோ டைதொ(4)டும் வெண்காட் டரற்கமைப் பித்தவறங்
காப்பா னவனென்னை ஆளுடையானி(5)க் கடலிடத்தே.

---

## திருவெண்காட்டுச்சாசனம்.

### III

1–4 (இவ்வரசன் மெய்க்கீர்த்திக்குப்பின்) (5) கோவிராஜகேஸரி வர்மரானஉடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்குயாண்(6)டுமூன்றாவது திருவெண்காட்டுநங்கைமகன் சிவலோகநாதன்விண்ணப்ப (7) த்தால் உடையார் திருவெண்காடுடையார்தேவதாநமான ஊர்களில் அந்தராயம்பந்(8)பண்டவெட்டிஉள்ளிட்டபாட்டங்களால்வந்த காசு உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவர் பிறந்தநாளா (9) ன ஆயிலேயத்திருநாள்களால் திருவெண்காடுடையார் திங்கள்தேர்றும் (உத்சவமும், திருப்பள்ளி எழுச்சியும், பத்துச்சிவயோகிகட்கும் ஐவர் பிராமணர்க்கும் ஊட்டும், கன்னியாபூஜைமுதலியவைகளும் நடப்பதாக ஏற்பாடுசெய்தான்).

T. A. கோபிநாதராவ்.

---

உ

# இரண்டு வேதாரண்யத்துச்சாசனங்கள்.

### I

(1) ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதின் எதிராமாண்டு உம்பளநாட்டு குன்றூர்நாட்டு ஸ்ரீ உடையார் திருக்கோடிக்குழகர் தேவதானத் தோம் இந்நாட்டு......

(2) பட்டன் நம்பியான் உத்தமன் குழகநாயனருக்குவிநியோகம்பண் ணிக்கு(கொ)டுத்த பரிசாவது. இந்நாயனார் திருக்கோயில்முன் யொருபத்தைந்தாவது கானவத்து(கருநட?)கண்ணதெண்டு நாய கர்படைநடந்து கோயிலிலேசிலகை(சிலா லேகை)........பின்பு ஆளுடையநாய

(3) னாரையும் நாச்சியாரையும் எழுந்தருளிவிக்கப் பார்த்தவிடத்து ஸ்ரீ பண்டாரத்து உடலில்லாதபடியாலே இந்த தர்(ன்)மத்தைச் சில (செல)வறக் கொடுத்தாகிலும் நாயனாரை எழுந்தருளிவித் துப்பூசைசெய்யப்பண்ணவேணுமென்றுபார்த்து இந்த உத்தம நம்பிபக்கலே தானமாக கொடுத்தோம். நீ

(4) ரும் உம்முடையவர்க்கத்தாரும் இந்தத் தன்மத்தைக் கைக் கொண்டு எழுந்தருளப்பண்ணவேணுமென்று சொல்ல, இவனும் இப்படிக்கு எழுந்தருளப்பண்ணுகைக்குவேண்டும் செலவுக்கு இவர்பக்கல் நாங்கள் கைக்கொண்டகாசு ருயகு. இக்காசு ஐம்பதி னாயிரமும் கைக்கொண்டு

(5) இந்நாயனாரையும் நாச்சியாரையும் திருநயனதிருநயனமெதவ? பூர்வமாக திருப்பணி குறைவரச்செய்கைக்குஇ(ரு)ந்தமைய(ா)ல் இத்திருக்கோயிலிலே (வேதாரணியம்கோயிலிலே)இந்நாயனாரை யும் நாச்சியாரையும் இத்தேவ கன்மி நம்பி......எழுந்தருளப் பண்ணுவித்து திருப்பணிபண்ணித் தருவோமாகவும்

[இச்சாசனம் இரண்டாம்பிரகாரம் வடபுறம்சுவரில் நடுவிலிருக்கிறது.]

## II

(1) ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு ௩-வது உம்பளநாட்டுக் குன்றூர்நாட்டு உடையார் திரு மறைக்காடுடையார்கோயில்

(2) ஆதிசண்டேசுர தேவகன்மிகளுக்கு மேற்பாடிகாவல் அரியான் மிச்சனனைதிரிவிசோழகங்கைநாடாழ்வானேன்ஆள்விலைப்பிரமா

(3) ண இசைத்திட்டுக்கு(கொ)டுத்த பரிசாவது எனயடம் பளரில் (ஊர்) சிதையாண்டிக் கூட்டத்துவே.....னன் பட்டநாயக்கண் ணப்பனையும் மாரம்பன் ஆதிநாயகக்

(4) கண்ணப்பனையும் உடையானன சொக்கநாயகக் கண்ணப்பனையும் கங்கையும் திருவளையும் முன்னாளிலே எங்கள் முதலியார் தந்தப் பிள்ளை ஆளக்

(5) கங்கைநாடாழ்வார்க்கு அடிமையாகக் கு(கொ)டுத்தமையால் இவர்களையும் இபகழ்தி? ஆண்மையையும் பற்று......னையும் ஆண்டாளியையும் ஆண்

(6) டானையும் தருக.............................களையும் இவர்கள் வர்க் கத்தாரையும் விற்றுக்கொடுத்தும், அதற்காவதான விலைகாசு ரூ. இக்காசு ஆயிரமும்

(7) ஸ்ரீ பண்டாரத்தேகொண்டு இவர்களை விற்றுக்கொடுத்தேன் அரியான் பிச்சனுன எதிரிலி சோழ நாடாள்வானேன் இப்படிக்கு இவை

(8) எதிரிலி சோழ கங்கை நாடாள்வானேனெழுத்தும், சோழன் ஆனை காத்தான் ஆன சோழியவரையனும், உத்த(ம)ன் திருவே கம்பமுடையான் ராஜராஜ கங்கை நாடாழ் வன் எழுத்து.

சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபாம்பரை, திருவாரூர்.

---

உ

# புத்தகமதிப்புரை.

—:(o):—

1. சைவப்பிரகாசம்:—இது மேலைச்சிதம்பரமாகிய பேரூரிலிருந்து மாதமொருமுறைவெளிவரும் தமிழ்ப்பத்திரிகை. இதில், சைவசம்பந்தமானவிஷயங்களோடு, வைஷ்ணவம் அத்வைதம்முதலிய மதங்களின் உண்மைகளும், வருணாச்சிரமதர்மஒழுக்கங்கள், ஆசாரச்சீர்திருத்தம், ஜீவியசரித்திரங்கள், தமிழ்நூலாராய்ச்சி தேசவர்த்தமானம்முதலிய விஷயங்களும் வெளியிடப்படுமென்றுதெரிகிறது. மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பண்டிதபரீக்ஷையில் முதற்றரத்திற்றேறியவரும், இப்பொழுது கோயம்புத்தூர்க்காலேஜில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருப்பவரும் தமிழ்நூலாராய்ச்சியிற் றேர்ச்சியுள்ளவருமான மகா-௱-௱-ஸ்ரீ அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் பத்திராசிரியராயிருந்து இதனை நடத்திவருவதாகத்தெரிவதால் இது கற்றோரும் மற்றோரும் விழைவுறுமாறு செவ்விதினடைபெறுமென்று நினைக்கிறோம். இதன்முதற்பகுதியில், சைவசமய மேம்பாடு, வேதமும் ஆகமமும், கல்வி, தமிழ்ப்பாஷையைப்பற்றிய அபிப்பிராயம்முதலிய விஷயங்களோடு வர்த்தமானமும் விநோதக்கூற்றுக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதன்வருடசந்தா ரூ. 2-8-0 கலாசாலைமாணவருக்கு ரூ. 2—0—0 தனிப்பிரதி அணா 4. இதன் வருமானத்தில் ஒருபாகம் அறுபத்துமூவர் குருபூஜைக்குச்செலவழிக்

கப்படுமென்றுதெரிவதால், சைவர்களும் தமிழபிமானிகளும் சந்தாதாராகச்சேர்ந்து சந்தாவை முன்பணமாகஅனுப்பிப் பத்திரிகையை ஆதரிப்பார்களாக. வேண்டுவோர் சைவப்பிரகாசமானேஜர் கோயம்புத்தூர் என்றவிலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

---

2. ஞானசம்பந்தவெண்பா:—இது மதுரை ஸெயிண்டுமேரிஸைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ மு. கோவிந்தசாமிஐயரவர்களாற் புதிதாகப் பாடப்பட்டது. ஐயரவர்கள் ஸ்ரீ: திருஞானசம்பந்தர் திவ்வியசரித்திரத்தைப் பெரியபுராணத்திற் கூறியமுறைப்படியே 246 வெண்பாக்களால் அழகாகப்பாடிமுடித்திருக்கிறார்கள். இதனைச்செய்வித்தார் மதுரை: திருஞானசம்பந்தஸ்வாமிகளாதீனகர்த்தராகியஸ்ரீலஸ்ரீ சாமிநாததேசிகரென்றுதெரிகிறது. பல சிறந்தவித்துவான்களாற்கொடுக்கப்பட்டசாற்றுக்கவிகளும் சிறப்புப்பாயிரமும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. ஐயரவர்கள் இன்னும் இத்தகைய பலநூல்களைச்செய்து உலகுக்குபகரிக்கும்வண்ணம் சைவாபிமானிகளும் தமிழபிமானிகளும் இப்புத்தகத்தை ஆதரித்து ஐயரவர்களுக்கு மகிழ்வூட்டுவார்களென்று நம்புகிறோம். இதன்விலை விவரமுதலியன வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதித்தெரிக.

---

3. ஜோதிடயவனகாவியம்:—இது, கோயம்புத்தூர் மு. அருணசலக்கவிராயரவர்களால் வடமொழியிலிருந்து தமிழிற் செய்யுள்வடிவாக மொழிபெயர்க்கப்பட்டதாகத்தெரிகிறது. முதனூலோடு ஒப்புநோக்கும் ஆற்றலுடையாரால் இதன்குணகுணங்கள் அறியத்தக்கன. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

4. ஜீவோஜ்ஜீவனசன்மார்க்கப்பிரகடனம் முதலியன:—இவை, மழவை ஸ்ரீ சாமிநாதையரவர்களால் இயற்றப்பட்டவை. ஜீவோஜ்ஜீவனசன்மார்க்கப்பிரகடனம், நகைச்சுவைக்குறுப்பானசொற்றொடர்களால் இருபொருள்படும்படி வசனநடையில் எழுதப்பட்டது. மற்றவை செய்யுள்ரூபமாகச்செய்யப்பட்ட தோத்திரநூல்கள். இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

---